பக்கங்கள் பன்னிரண்டு

Registered as a News Paper

# உதயன்

விலை ரூபா 6-00

...ர் 14 ...ஆண்டு 2030 சித்திரை 05 ஞாயிற்றுக்கிழமை (18-04-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 120

18 APR 1999
மாநகராட்சி மன்றம்
...

# நம்பிக்கை வாக்கெடுப்பு தோல்வி

# வாஜ்பாய் அரசு கவிழ்ந்தது!

## காரசாரமான விவாதத்தின் பின் வாக்கெடுப்பு

புதுடில்லி, ஏப்ரல் 18

பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையிலான பாரதீய ஜனதா அரசு நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் ஒரு வாக்கினால் தோல்வி அடைந்தது. நம்பிக்கை வாக்கெடுப்புக்கு ஆதரவாக 269 வாக்குகளும் எதிராக 270 வாக்குகளும் கிடைத்தன. நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வி அடைந்தவுடன் பிரதமர் வாஜ்பாய் ஜனாதிபதி கே ஆர் நாராயணனைச் சந்தித்து தமது இராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்தார். மாற்று ஏற்பாடு ஒன்றை செய்யும் வரை பதவி நீடிக்குமாறு அவரை ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

பாரதீய ஜனதா அரசு மீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையை கடந்த வியாழனன்று பிரதமர் வாஜ்பாய் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

பாரதீய ஜனதாக் கூட்டணியில் அங்கம் வகித்துவந்த பிரதான கட்சிகளில் ஒன்றான அ. தி. மு. க; அரசுக்கான தனது ஆதரவை விலக்கிக் கொண்டதை அடுத்து, அரசின் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கும்படி ஜனாதிபதி கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து இந்த நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

மூன்று நாள்கள் இடம்பெற்ற காரசாரமான விவாதத்தின் பின்னர் பெரும் அமளிதுமளிகள் மத்தியில் நேற்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்தியாவின் நாடாளுமன்ற வரலாற்றிலேயே மிகவும் நீண்ட நேரம்—அதாவது பகல் 12-15 மணி முதல் 2-10 மணி வரை—வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

முதலில் மின்னணு முறையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் குளறுபடிகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து வாக்குச் சீட்டுக்கள் உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 542 உறுப்பினர்களில் மூவர் வாக்களிக்கவில்லை. அந்த மூவரில் அ. தி. மு. கவைச் சேர்ந்த சேடப்பட்டி முத்தையாவும் ஒருவர் தவறுதலாக வாக்குச் சீட்டை சட்டைப் பையில் வைத்துவிட்டதாக அவரினால் பின்னர் காரணம் தெரிவிக்கப்பட்டது.


செல்வி மயாவதி தலைமையிலான ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட பகுஜன சமாஜக்கட்சி, தமிழ் மாநில காங்கிரஸ் ஆகியவையும் கடைசி நேரத்தில் அரசுக்கு எதிராக் வாக்களித்தன. ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கிணங்க தி. மு. க. உறுப்பினர்கள் அறுவரும் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

காங்கிரஸ் எம். பியாக இருந்து ஒரிஷா முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ள கிரிதர்குமாங் வாக்களிக்கத் தகுதி உடையவரா என்பது நீண்டநேரம் பெரும் சர்ச்சையைக் கிளப்பி விட்டிருந்தது. அவருக்கு வாக்களிக்க தகுதி இல்லை என்று பாரதீய ஜனதா உறுப்பினர்கள் வாதிட்டனர். முதலமைச்சர் பதவியை அவர் ஏற்றுள்ள போதிலும் எம். பி பதவியைத் து..க்கவில்லை என்று காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க் கட்சியின.. வலியுறுத்தினர் இறுதியில் கிரிதர்குமாங்கை அவரது ம..ச்சாட்சிப்படி நடந்து கொள்ளுமாறு சபாநயகர் பால..கி கேட்டுக்கொண்டார்.

இந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் இந்திய தேசிய லோக்தள் க..சி உறுப்பினர்கள் நால்வரும் அரசுக்கு ஆதரவாகவே வாக்களித்தனர்.

நேற்று வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்னர் நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணைக்கு பதில் அளித்து பிரதமர் வாஜபாய் உரை நிகழ்த்துகையில் அ. தி. மு. க; நாட்டின் நல

(12 ஆம் பக்கம் பார்க்க)



## எதிர்க்கட்சிகள் ஆராய்கின்றன

புதுடில்லி ஏப்; 18

நம்பிக்கை வாக்கெடுப்பில் பாரதீய ஜனதா அரசு கவிழ்ந்ததை அடுத்து புதுடில்லியில் நேற்று அரசியல் நடவடிக்கைகள் சுறுசுறுப்பு அடைந்தன.

காங்கிரஸ் தலைமையில் மாற்று அரசு அமைக்கும் சாத்தியம் குறித்து நேற்று எதிர்க்கட்சிகள் கலந்தாலோசனைகளை நடத்தினர்.

காங்கிரஸ் செயற்குழு நேற்று இரவு எட்டு மணிக்கு கூடியபோதிலும் முடிவு எதுவும் அறிவிக்கப்படவில்லை. மாற்று அரசு ஒன்றை அமைப்பதற்கு காங்கிரஸுக்கு ஆதரவு வழங்குவதாக பெரும்பாலான இடதுசாரிக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

மார்க்சிய கம்யூனிஸ்ட்; இந்தியக் கம்யூனிஸ்ட் உட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சனத்தொகைக் கணக்கெடுப்பு உடன் நிறுத்தப்பட வேண்டும்

### கபடத்தனமானது என்கிறது புளொட்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

தற்போது இராணுவத்தினால் குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் சனத்தொகை கணக்கெடுப்பு தமிழ்மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கக்கூடியது கணக்கெடுப்பு நடத்தப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

சனத்தொகை கணக்கெடுப்புத் தொடர்பாக புளொட் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யுத்தம் காரணமாக தமிழ் மக்கள் தமதுவாழ்விடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வன்னிக்காடுகளிலும் பிறமாவட்டங்களிலும் கடல்கடந்தநாடுகளிலும் அகதிகளாக வாழ்ந்தும் வருகின்றனர்.

இவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமராத வரையில் கணக்கெடுப்பு நடத்துவது பொருத்தமற்றது.

இந்த நடவடிக்கை ஒரு கபடத்தனமானது என்றே நாம் கருதுகின்றோம்.

இந்த நடவடிக்கை தமிழ் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் குறைக்கக்கூடியது ஆகையால் இது நிறுத்தப்பட வேண்டும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

## பொலீஸாரின் சடலங்கள் புலிகளினால் ஒப்படைப்பு!

வவுனியா, ஏப். 18

மன்னார் — வவுனியா வீதியில் 9 ஆம் கட்டைப் பகுதியில் உள்ள முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகள் மீதான தாக்குதலில் கொல்லப்பட்ட மூன்று பொலீஸாரின் சடலங்களை விடுதலைப் புலிகள் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைத்தனர்.

இந்தத் தாக்குதலில் நான்கு பொலீஸார் காணாமற்போய் விட்டனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டது தெரிந்ததே.

இந்தச் சடலங்களில் ஒன்று பொலீஸ் இன்ஸ்பெக்டர் உடையது.

இந்தச் சடலங்கள் தற்பொழுது செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினால் வவுனியாவுக்கு எடுத்துவரப்பட்டு வவு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பெருமாள் மீண்டும் கொழும்பில்

வடக்கு — கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் மீண்டும் கொழும்பு வந்துள்ளார்

(12 ஆம்பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் லண்டனில் தலை மறைவு

ஏயர் இந்தியா விமானத்தில் பயணம் செய்த இலங்கைத் தமிழர்கள் ஐவர் லண்டனில் ஹோட்டல் ஒன்றில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### மெய்ப்பாதுகாவலர்:

## புளொட் அமைப்பு மட்டும் பட்டியல் சமர்ப்பித்தது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

யாழ். உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு மெய்ப்பாதுகாவலர்களை நியமிப்பதற்கான பெயர்ப் பட்டியலை புளொட் அமைப்பு மட்டுமே நேற்று யாழ். பாதுகாப்புத் தலைமையகத்துக்கு சமர்ப்பித்தது.

உள்ளூராட்சி சபைகளில் உறுப்பினர்களைக் கொண்ட ஏனைய கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. டி. பி., ரெலோ ஆகிய கட்சிகள் இதற்கான பெயர்ப்பட்டியல்களை சமர்ப்பிக்கவில்லை.

மெய்ப்பாதுகாவலர்களை நியமிக்கும் இறுதித் தினம் நேற்று என்றும்—

பட்டியல் தரப்படாவிட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 3 இளைஞர் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில்

### பொலீஸாரால் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

வட்டுக்கோட்டை நடுவயல் பகுதியில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் கொல்லப்பட்டனர் என்று கூறப்படும் மூன்று இளைஞர்களின் சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் பொலீஸார் இந்தச் சடலங்களை ஒப்படைத்தனர்.

இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் அணி நடத்திய திடீர் தாக்குதலில் இவர்கள் உயிரிழந்தனர் என்று முதலில் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

மூன்று சடலங்களும் பிரேத பரிசோதனைக்காகவும் அடையாளம் காணப்படுவதற்காகவும் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்கள் விடுதலைப் புலிகள் என படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ-ரி)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை சுந்தரம்மா

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை மேற்கு ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சுந்தரம்மா 17 - 4 - 99 காலை 5.00 மணியளவில் காலமானார்.

அன்னார் திருமதி குமாரசாமி மகேஸ்வரி (யா / பெரியபுலம் மகா வித்தியாலய இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புத் தாயாரும், திரு. ச. குமாரசாமியின் (குருநாகல் பிரபல வர்த்தகர்) அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (18-4-99) அவரது இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
**திரு. திருமதி குமாரசாமி**

19/1, ஐயனார் கோயிலடி,
வண், மேற்கு, யாழ்ப்பாணம். (64925)

## அருளம்பலம் தெட்சணாமூர்த்தி
(பப்பா)

சரவணையைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும்கொண்ட அருளம்பலம் தெட்சணாமூர்த்தி அவர்கள் 17-4-99 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஆயுர்வேத டாக்டர் அருளம்பலம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பத்மநாதன், சிவமணி (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாக்கியலெட்சுமியின் அன்புக் கணவரும் ஆனந்தராசா (கனடா), ரதிமணி, சசிதரன் (கனடா), தயாபரன் (ஜேர்மனி), பாலகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கரத்தினம்பாள் (வவி - கனடா), இளையகுமார் (சுதுமலை), கோமதி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌசிகனின் (கனடா) அன்புப் பேரனும் விநாயகமூர்த்தி, சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18-4-99) ஞாயிற்றுக்கிழமை 12. 00 மணியளவில் தகனக்கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இ. இளையகுமார்**
(மருமகன்)

ஈஞ்சடி வைரவர் கோயிலடி,
சுதுமலை வடக்கு,
சுதுமலை. (64942)

## சின்னத்தம்பி பாலானந்தன்
(நமசிவாயம் பத்தர்)

தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த சின்னத்தம்பி பாலானந்தன் அவர்கள் 17-4-99 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கநாயகியின் அன்புக் கணவரும் வசந்தாதேவி, சிவானந்தன், சச்சிதானந்தன், பரமானந்தன், சதானந்தன், சகுந்தலாதேவி, பத்மாதேவி, நித்தியானந்தன், லலிதாதேவி, சசிகலாதேவி (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதாஸ், ரதி, இரஞ்சி, சிவஞானம், சிவமணி, சந்திரன், ரவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18-4-99) ஞாயிற்று கிழமை நண்பகல் 12 00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சிவானந்தன்**
(மகன்)

தும்பளை,
பருத்தித்துறை. (64948)

## திருமதி சிவக்கொழுந்து ஐயம்பிள்ளை

பருத்திக்கலட்டி, சுன்னாகம் மேற்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிவக்கொழுந்து ஐயம்பிள்ளை 17-4-99 இல் காலமானார்.

அன்னார் செ. ஐயம்பிள்ளையின் (முன்னாள் உதவி ஆணையாளர், குருநாகல் மாநகரசபை), அன்பு மனைவியும் யோ. சிவசோதி (மலேசியா), காலஞ்சென்ற செ. ஜெகசோதி, சி சுகுணம் ஆகியோரின் அன்புத் தாயாரும் நா. யோகலிங்கம் (மலேசியா) ஐ. செல்வவிஜயசேகரன் (தொழில் நுட்ப உதவியாளர், புல்மோட்டை), சி. சிவகுமாரன் (ஆசிரியர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும் யோ. யோகக்கிருஷ்ணன், யோ. சிவரஜினி (மலேசியா), ம. றமேஸ் (ஜேர்மனி), ம. சுரேஸ், ம கரிபிரசாந், ம. கல்பனா, மு. பாமினி மு. தமிழினி, செ. ஜெனகா, கோ. அபிராமி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18-4-99) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெறறு பூதவுடல் தகனககிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**செ. ஐயம்பிள்ளை**
(கணவர்)

பருத்திக்கலட்டி,
சுன்னாகம் மேற்கு.
சுன்னாகம். (64937)

## நோயாளர் கப்பல்சேவை

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை இன்று நடைபெறும்.

இந்தக் கப்பலுக்கு பதிவு செய்த நோயாளர்கள், உதவியாளர்கள் ஆகியோர் இன்று காலை 7. 30 மணிக்கு முன் யாழ். போதனா வைத்திய சாலைக்கு சமுகம்கொடுக்கும் படி கேட்கப்பட்டுள்ளது.

## கௌரவிப்பு

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் பின்னர் பிரதி அதிபராகவும் இருந்து தற்போது அதிபராக நியமனம் பெற்றுள்ள நா. வன்னியசிங்கத்தைக் கௌரவிக்கும் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொள்வர். (இ-7)


**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று முதல்
ரஜனி - சௌந்தர்யா
நடித்த
**படையப்பா**
காட்சிகள்:
9-00 12-00, 3-00
FAX No. 070 212223
FOREIGN T.P. No.
0094 -70 -212223
(சி/7233)

**ராஜா**
யாழ்ப்பாணம்
சூரியா - முரளி - ஜீவிதா
ரசிகா - மணிவண்ணன்
விவேக் - ராதிகா - நாஸர்
மற்றும் பலர் நடித்த
**காதலே நிம்மதி**
இன்று காட்சிகள்
10-30, 2-00, 5 00
(சி/7100)

**ராஜா 'B'திரை**
யாழ்ப்பாணம்
ரஜனி - சிவாஜி
சௌந்தர்யா
மற்றும் பலர் நடித்த
**படையப்பா**
காட்சிகள்:
10-00, 1-00, 4-00
(சி/7237)

**நாகம்ஸ்**
சுன்னாகம்.
இன்று
பிரபுதேவா - கயோல்
அரவிந்தசாமி நாஸர்
நடித்த
**மின்சாரக் கனவு**
காட்சிகள்: 11-00, 2-30
(புதியநேரம்)
(64933)

**ஸ்ரீ செல்வா**
சினிமா
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
பகல் நேரம்:- 10-00, 2-00
ரஜனி - சௌந்தர்யா
நடித்த
**படையப்பா**
(நேரடி CD)
குறிப்பு:- காட்சிகள் குறித்த நேரத்தில் ஆரம் [illegible]
(64938)


# மரண அறிவித்தல்கள்

## சின்னக்குட்டி பேரம்பலம்

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி பேரம்பலம் (நேற்று) 17 - 4 - 99 இல் காலமானார்.

இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவபாதம் (மஸ்கன்ஸ் லிமிடெட்), கதிர்காமநாதன், இந்திராதேவி, தில்லைநாதன், அம்பிகாதேவி, செந்தில்நாதன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, சிவசோதிலிங்கம், மோகனசேகரம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தாவடி இல்லத்தில் இன்று (18-4-99) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
**மனைவி. பிள்ளைகள்.**

தாவடிச் சந்தி. (64941)

## மெற்றில்டா லில்லி இம்மனுவல்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மெ.லி. இம்மனுவல் காலமாகிவிட்டார்.

இவர்காலஞ்சென்ற கபிரியல் அலோசியஸ் இம்மனுவல் அவர்களின் அன்புமனைவியும் பபா, வெனிற்றோ, சோதி, ஜோர்ஜ், றாஜன், அன்ரன், ஜெமினி, ஜீவம், றஜினி ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18-4-99) காலை 10. 30 (இ. நே ) மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஜோர்ஜ், றாஜன்,
அன்ரன்,
பிள்ளைகள்!**

255, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (64943)

## அப்பாவு கந்தையா
[முன்னாள் வைரமாளிகை கணக்காளர்]

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் 342, கே. கே. எஸ். வீதியை வதிவிடமாகவும் தற்போது 114, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாவு கந்தையா அவர்கள் 16-04-99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் கணேசமூர்த்தி [பிரான்ஸ்], வைத்தீஸ்வரன் [பிரான்ஸ்], குகதாஸ் [பிரான்ஸ்], குமாரதாஸ் [பிரான்ஸ்], சிவதாஸ்[பிரான்ஸ்]ஆகியோரது பாசமிகு தந்தையாரும் இந்திரா, சிவயோகநாயகி, நகுலாம்பிகை, வாசுகி ரேவதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக் கிழமை [18-04-99] 114, பிறவுண் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**மனைவி**

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [64916]

## க.சி. செல்லப்பா

இணுவில் மேற்கைச் சேர்ந்த க.சி. செல்லப்பா [தாமோதரம் ஸ்ரோர்ஸ், மன்னார்) 09 - 04 - 1999 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னத்தம்பி - இளையபிள்ளை தம்பதிகளின் மகனும் பூமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - லெட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் தளையசிங்கம் (கனடா), ஜெயராணி, ஜெயராசா (கனடா), ஜெகதீஸ்வரி, ஜெகதீஸ்வரன் (கனடா), ஜெயக்குமாரன் (கனடா), ஜெயகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கமலேஸ்வரன் (தபால் அதிபர், வயாவிளான்), சத்தியபாமா (கனடா), இராமநாதன் (மாநகரசபை, யாழ்ப்பாணம்), கிருஷ்ணலீலா (கனடா), சிவகுமார் (ஆசிரியர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), வாசுகி (கனடா) சுமங்கலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் பானுரேகா, மோகனகாந்தன், கமலகாந்தன் (மாணவர்கள், கொக்குவில் இந்து), பிரிந்தா, ஜீவா, சுகிர்தா, அஜந்தன், ஆரங்கன், கல்பனா, கார்த்திகா, விமல், தர்சன், சிவலவன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, தம்பையா, சின்னத்துரை, தாமோதரம்பிள்ளை, கந்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியர், கொக்குவில் இந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கணேசு, முத்துலிங்கம் (J P. முன்னாள் கி.ச. தலைவர், உடுவில்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18-4-99) காலை 10.00 மணிக்கு நடைபெற்று. பூதவுடல் தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**செ. பூமணி** (மனைவி)
**பிள்ளைகள்,
மருமக்கள்.**

இணுவில் மேற்கு,
இணுவில். (64913)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த பத்மநாதன் முருகானந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் லிங்கம் பூங்கா, இல. 6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற க வரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[64924]

## கழுகுகள் விளையாட்டுக் கழகம்

நடத்தும்

9 நபர் கொண்ட உதைபந்தாட்ட

## சுற்றுப்போட்டி - 1999

இச் சுற்றுப் போட்டிக்கு பருத்தித்துறை, யாழ். மாவட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்கள் பங்குபற்றலாம்

**விண்ணப்ப முடிவு திகதி: 25 - 04 - 1999**

விண்ணப்பப்படிவங்கள் பெற விரும்பும் கழகங்கள் "செயலாளர், கழுகுகள் விளையாட்டுக் கழகம், வல்வெட்டித்துறை" என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்

- செயலாளர்

கழுகுகள் விளையாட்டுக் கழகம்,
வல்வெட்டித்துறை.

(64888)

## நல்லூர் பிரதேச சபை
## வேலைகளுக்கான
## ஒப்பந்தகாரரைப் பதிவு செய்தல்

நல்லூர் பிரதேச சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கேள்வி நடைமுறைகள் மூலம் வேலைகள் செய்ய விரும்பும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் கோரப்படுகின்றன.

கீழ் குறிக்கப்பட்ட ஆவணங்களை அலுவலகத்தில் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக ரூபா 100 மீளளிக்கப்படக் கூடிய வைப்புப் பணம் ரூபா 10,000ம் செலுத்துவதன் பேரில் இச் சபையின் வேலை ஒப்பந்தகாரராகத் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

1. ரூபா 5,00,000ற்கான சொத்துக்களின் சான்றிதழ்
2. வியாபாரப் பதிவுச் சான்றிதழ்
3. ICTAD பதிவுச் சான்றிதழ்
4. பொருள்கள், சேவைகள் வரிப் பதிவுச் சான்றிதழ்
5. தொழில் நுட்பத் தகுதிச் சான்றிதழ் [வீதி அபிவிருத்தி அதிகார சபை / வீதி அபிவிருத்தித் திணைக்களம் / மாநகர, நகர, பிரதேச சபைகள் / கட்டடம் / நிர்மாணத் திணைக்களம்).
6. தொழில் நுட்பம், வாகனங்கள், உபகரணங்களின் ஆளணி முதலியவற்றின் சான்றிதழ்.

இச்சபையுடன் பதிவு செய்து கொள்ளும் ஒப்பந்தகாரர்களைத் தவிர, வேறு எந்த தனிநபருக்கோ அல்லது தாபனங்களுக்கோ இனிவரும் காலங்களில் ஒப்பந்த வேலைகள் தொடர்பில் கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.


பதிவுகள் யாவும் 1999 - 05 - 03 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

க. மணிபல்லவராஜன் ஜே. பி. யூ. எம்.
தலைவர்
நல்லூர் பிரதேச சபை

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.

(சி / 7213)

## சேவை நலன் பாராட்டு



### திரு. தம்பு. கனகரத்தினம்

ஆசிரியராக 15 வருட சேவையையும், அதிபராக 25 வருட சேவையையும் இனிதாற்றி 18 - 04 - 99 இல் ஓய்வுபெறும் அதிபர் திரு. தம்பு கனகரத்தினம் அவர்களைப் பாராட்டுகின்றோம்.

மகாத்மா ச. ச. நிலையம்,
அல்வாய் வடக்கு.

(64921)

## பொதுக் கூட்டம்

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரின் ஒன்றுகூடலும் வருடாந்தப் பொதுக் கூட்டமும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-ரி)

## விற்பனைக்கு

றெக்கோடிங் சென்ரருக்குத் தேவையான அனைத்துப் பொருள்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**தீஸ்**
**எலெக்ரோனிக்ஸ்**
**616, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர் கோயில் முன்பாக.**

[64914]

## தேவை

யாழ் மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் Fancy கடைக்கு ஆர்வமுள்ள

**பெண் விற்பனையாளர்**

தேவை

சுயவிவரக் கோவையுடன் விளம்பர இலக்கத்துக்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம் 872
மே/பா உதயன்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(64864)


A GURANTEED PRODUCT

FROM LANKA NIPPON

# KOBE

## ANTENNA BOOSTER NO:1 SELLER IN SRI LANKA

AVAILABLE ISLANDWIDE

ASK YOUR NEIGHBOUR FOR 'KOBE' PERFORMANCE

USE "NIPPON" BRAND
COAXIAL CABLE AND
FEEDER (FLAT) CABLE
FOR CRYSTAL CLEAR PICTURE
ALL CABLES ARE GURANTEED
100 YARDS COILS.
ALSO AVAILABLE "CAVEL" BRAND
COAXIAL CABLES (MADE IN ITALY)
FOR TELEVISION & COMMUNICATION

**LANKA NIPPON**

18, KEYSER STREET, COLOMBO-11
Tel: 324726, 437735 FAX: 437736

[சி-7212]


## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

திருநெல்வேலி.

# பவள விழா ஆண்டு

## (1923 - 1998)

## வதிவிடக் கருத்தரங்கு

கருப் பொருள்: சைவ மரபில் தேவாரங்கள்

**18. 04. 1999 ஞாயிற்றுக்கிழமை**

மூன்றாம் நாள் நிகழ்வுகள் காலை 9. 00 — மாலை 5. 30

**காலை அமர்வு**

9. 00 — தேவாரம்

9. 10 — தலைமையுரை: **திருமதி கலைவாணி இராமநாதன்** (முதுநிலை விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.)

9. 25 — கருத்துரை: தேவாரங்கள் காட்டும் உள்ளொளி **கலாநிதி சபா. ஜெயராசா** (முதுநிலை விரிவுரையாளர், கல்வியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்.)

10. 00 — கருத்துரை: தேவாரங்களும் சைவ மரபும் **திரு. சிவ. மகாலிங்கம்** (விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை.)

10. 35 — தேநீர் இடைவேளை

11. 00 — கருத்துரை: தேவாரங்களில் மொழியாற்றல் **பேராசிரியர் அ. சண்முகதாஸ்** (கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்.)

11. 35 — கலந்துரையாடல்

12. 35 — மதிய உணவு

**மாலை அமர்வு**

1. 30 — தலைமையுரை: **பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

1. 45 — களப் பயிற்சி மதிப்பீடு: **பேராளர்**

2. 15 — கலந்துரையாடல்

3. 00 — தேநீர் இடைவேளை

3. 30 — தேவார இசை: **திருமதி ப. சிவநாதன்**, **செல்வி ந. தனசொரூபி**

4. 15 — நிறைவுரை: **திரு. சோ. பத்மநாதன்** (செயலாளர், சைவ வித்தியா விருத்திச் சங்கம்.)

4. 30 — நன்றியுரை: **திரு. வீ. சகாதேவசங்கரி** (பொருளாளர், சைவ வித்தியா விருத்திச் சங்கம்.)

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
திருநெல்வேலி.

[சி/7198]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனம்பழப் பற்பசை விரைவில் சந்தைக்கு

பனை அபிவிருத்திச் சபையினால் பனம்பழப் பற்பசை உற்பத்தி யாழ்ப்பாணத்தில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பில் பரீட்சார்த்தமாகமேற்படிசபையினால்உற்பத்தி செய்யப்பட்ட பற்பசை வெற்றியளித்துள்ளதைத் தொடர்ந்தே இதனை யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

பற்பசை உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்கள் அண்மையில் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

விரைவில் பனம்பழப் பற்பசை யாழ்ப்பாணத்தில் சந்தைக்கு விடப்படும் என்று மேற்படி சபை அதிகாரி ஒருவர் கூறினார். (ஐ-5-7)

## ஆரம்பகல்வி செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

யாழ்ப்பாண கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 3, 4 ஆகிய வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வதிவிட செயலமர்வு ஒன்று இந்த மாத இறுதியில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி வதிவிடக் கருத்தரங்கில் ஆரம்பக்கல்வி அபிவிருத்தி தொடர்பாக கருத்துரைகள் வழங்கப்படும் எனவும் —

அதில் பங்குகொள்ளும் ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பாக யாழ்ப்பாண வலய ஆரம்பக்கல்விப் பிரிவுக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறும் —

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிமனை கேட்டுள்ளது.

(ஐ-7)

## நல்லூர் பிரதேச சபை

திருநெல்வேலி

### முக்கிய அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் எமது சபைக்கோ அல்லது தனியாருக்கோ சொந்தமான வியாபார நிலையங்களுக்கு முன்பாக சபையின் முன் அங்கீகாரமின்றி அமைக்கப்பட்டுள்ள கொட்டகைகள், வேறு அமைப்புகள் யாவற்றையும் 15-05-99 ஆம் திகதிக்கு முன் அகற்றி உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

குறிக்கப்பட்ட திகதிக்கு முன் அகற்றப்படாத அங்கீகாரமற்ற கொட்டகைகள், வேறு அமைப்புகள் யாவும் எதுவித முன் அறிவித்தலுமின்றி சபையால் அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

க. மணிபல்லவராஜன்
தலைவர்
நல்லூர் பிரதேச சபை.

[சி/7223]

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

### அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவுகள்

யாழ். மாவட்ட இளைஞர் கழகங்களின் சம்மேளன அபிவிருத்தி நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டுகளில் வெற்றியீட்டிய இலக்கங்கள்:

1ஆம் பரிசு; 0304
2ஆம் பரிசு: 3234
3ஆம் பரிசு: 4958

10 ஆறுதல் பரிசுகள்:

3137, 4886, 0140, 3810, 1893.
0513, 4433, 1033, 3803, 3761.

இவற்றுக்கான பரிசில்களை எதிர்வரும் 1999-04-26 அன்று எமது அலுவலகத்தில் காலை 10.30 மணியளவில் பெற்றுக் கொள்ளலாம்.

அ சக்திவேல்
64899) மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர்

## இயற்கை மரணம் எனத் தீர்ப்பு

தென்மராட்சி, ஏப்ரல்18

கடந்த 9 ஆம் திகதி வெள்ளியன்று காய்ச்சலால் மரணமான ஐந்து வயதுச் சிறுமிக்கு மூளை மலேரியா நோய் ஏற்படடே மரணம் சம்பவித்ததாக சட்ட வைத்திய அதிகாரி அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தர்மேந்திரர் இயற்கை மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார்.

மீசாலையைச் சேர்ந்த மரிய அலிஸ்ரா வினோறொபினா என்னும் சிறுமி மலேரியா காய்ச்சலுக்கு பாவிக்கும் குளிசைகள் பாவித்த பின்னர் மரணம் சம்பவித்ததாகக் கூறப்பட்டமை தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை நடத்திய சட்ட வைத்திய அதிகாரி மேற்படி மலேரியா காய்ச்சலின் தாக்கத்தினார் மரணம் சம்பவித்ததாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

[உ-117]

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி

### முறைசாராக்கல்வி பயிற்சி நெறிகள்

★ கணனி
★ வானொலி, தொலைக்காட்சி தொழில்நுட்பவியல்
★ மரச்சிற்பக்கலை
★ மரத்தளபாட வடிவமைப்பு

விண்ணப்ப முடிவு திகதி: 30–04–1999

அதிபர்.

[64898]

## நல்லைக்குமரன் மலர் 1999 [7]

இளைய தலைமுறையினரிடையே சமயப்பற்றினையும், இறைபக்தியயும் ஆன்மீக உணர்வையும் மேலோங்கச் செய்வதையே குறிக்கோளாகக்கொண்டு வழமைபோல் இவ்வருடமும் எமது குழுவினால் வெளியிடப்படவுள்ள மேற்படி மலருக்கு உகந்த கட்டுரைகளை/ துறைசார்ந்த அறிஞர்கள மற்றும் சமயப் பெரியார்களிட மிருந்து நாம் எதிர்பார்க்கின்றோம்.

பொருத்தமான ஆக்கங்களை எதிர்வரும் 31-5-99 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மலரில் இடம்பெறத்தகுந்ததும் தரமானதுமான ஆக்கங்கள் நிச்சயமாகப் பிரசுரிக்கப்படும்.

சைவசமய விவகாரக் குழு,
யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்.

16-4-99 [சி/7221]

## உரும்பிராய் வடக்கு

### சரஸ்வதி பாடசாலை

(பிற்போடப்பட்டது)

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு 1914
இரண்டாம் பரிசு 505
மூன்றாம் பரிசு 1591

ஆறுதல் பரிசுகள்

2142 852 869

பரிசு பெற்றவர்கள் அவற்றை வந்து பெற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

பொ. றம்சன்,
தலைவர்

[64885]

## வெடி கொளுத்திய சிறுவன் காயம்

நெல்லியடி, ஏப்ரல் 18

தீக்குச்சி மருந்தில் வெடி கொளுத்தும் விளையாட்டு வினையாகியது சிறுவன் ஒருவனின் கையில் இரு விரல்கள் சிதறுண்டன.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை — சித்திரை புதுவருடத் தினத்தன்று — தும்பளை பருத்தித்துறையில் இடம்பெற்றது

இதே இடத்தைச் சேர்ந்த தவராசா பிரதீபன் (வயது 12) என்னும் சிறுவனே இடது கையில் விரல்கள் சிதறுண்ட நிலையில் மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

(ஐ-109)

## நீங்காத நினைவில் ஓராண்டு



திருமதி

### இராசபூரணி சாம்பசிவம்

மலர்வு 29 – 05 – 1950

உதிர்வு 29—04—1998

குடும்பத்தின் ஒளிவிளக்காய் பாசத்தின் உறைவிடமாய் எங்களை வளர்த்து வழிகாட்டிய அன்புத் தெய்வமே ஆண்டு ஒன்றல்ல ஓராயிரம் ஆண்டானாலும் ஆறிடுமே எமது நெஞ்சம் தொழுது நிற்போம் உமது ஆத்ம சாந்திக்காக!

கணவன், பிள்ளைகள்.

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(64909)

## தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும் தொடர் கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 20, 21 ஆம் திகதிகளில் (செவ்வாய், புதன் கிழமைகளில்) நடைபெறும் எனவும்—

சகல போதனாசிரியர்களையும் ஆசிரியர்களையும் சமுகம் தருமாறும்—

நிலையத்தின் சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுள்ளார்.

[உ]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 15 – 07 – 1906



இறப்பு 20 – 03 – 1999

திருமதி

### கனகம்மா சின்னத்துரை

20—03–99 சனிக்கிழமை சிவபதம் எய்திய எங்கள் அன்புத் தெய்வம் திருமதி கனகம்மா சின்னத்துரை அவர்களின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டும் அனுதாபச் செய்திகளை அனுப்பியும் வேறு பல வகைகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அனுதாபிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(மருமகன்) திரு. தருமராஜா
(மகள்) திருமதி யோகேஸ்வரி தருமராஜா,
(மருமகள்) திருமதி சாந்தி கணேசரத்தினம்:

219 (105), கோயில் வீதி,
நல்லூர்.

(64833)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## மனம் இல்லா எழுத்து!

இலங்கையில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒரே காலத்தில் கொண்டாடும் பண்டிகை சித்திரைப் புத்தாண்டு ஆகும் இந்தப் புத்தாண்டுப் பண்டிகையை ஒட்டி அரசியல் தலைவர்கள் வருடாந்தம் வெளியிடும் அறிக்கைகளில், இரு இனங்களுக்கும் பொதுவாக இது அமைந்த சிறப்பினைக் குறிப்பிட்டுக் கூறுவதற்குத் தவறுவதில்லை.

இரு இனங்களிடையேயும் சமாதானத்தையும் ஒற்றுமையையும் உண்டாக்க வேண்டும் என்பதனையும் ஆட்சித்தலைவர்கள் தமது அறிக்கைகளில் வலியுறுத்திக் கூறுவதுண்டு. ஆனால் நடைமுறையில் செயல்வடிவில் அவற்றுக்கான முயற்சிகளிலேனும் அத்தலைவர்கள் ஈடுபடுவதில்லை,

மாறாக, அறிக்கைகளில் சொற்றொடர்களால் மினுக்கப்பட்ட சமாதானத்துக்கும் ஒற்றுமைக்கும் ஊறு விளைவிக்கும் வகையிலேயே பதவியில் உள்ள அரசாங்கங்களும் தலைவர்களும் செயற்பட்டதுண்டு.

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா இம்முறை வெளியிட்ட சித்திரைப் புத்தாண்டுச் செய்தியில், சிங்கள — தமிழ் மக்கள் மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வு, பரஸ்பர கௌரவம் ஆகியவற்றை மேலும் விருத்தி செய்யும் வகையில், இன சமத்துவத்தை வலுப்படுத்துவதற்கு இதனைப் போன்ற உரிய தருணம் இல்லை — என்று சிலாகித்துக் கூறியுள்ளார்.

புது வருடப் பண்டிகை பொதுவானதாக, ஒரே காலத்தில், ஒரே நாளில் அமைந்து விடுவதால் மட்டும் பரஸ்பர புரிந்துணர்வும், பரஸ்பர கௌரவமும் உண்டாகி விடும் என்பது அர்த்தமற்றதாகும்.

புரிந்துணர்வு, கௌரவம் சமத்துவம், சமாதானம் ஆகியவற்றை உண்டாக்குவதற்கு அவற்றில் நெடுநாளைய ஈடுபாடும், அர்ப்பணிப்பும், செயற்பாடும் அவசியம் பதவியில் உள்ள அரசாங்கங்கள், புத்தாண்டுச் செய்தி வழங்கும் ஆட்சித்தலைவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் மேற்குறிப்பிட்ட தன்மைகளுடன் உள்ளார்ந்தாரமாகச் செயற்பட்டிருப்பின் நாட்டுக்கும் மக்களுக்கும் இன்றைய பரிதாப நிலை ஏற்பட்டிருக்காது

சொல் ஒன்று செயல் வேறாக இருந்து கொண்டு, இன சமத்துவத்தை எவ்வாறு வலுப்படுத்த முடியும்?

தமிழ் மக்கள் தமக்குரிய உரிமைகளைத்தான் கேட்கிறார்கள்; சலுகைகளை அல்ல சிங்கள மக்களின் உரிமைகளைப் பறித்தெடுக்க தமிழர்கள் எப்போதும் நினைத்தவர்கள் அல்லர் சிங்கள மக்களுக்கு உள்ள சகல உரிமைகளும் தமிழ் மக்களுக்கும் உரித்தானவை—

சிங்கள மக்கள் இவற்றைப் புரிந்து கொள்ளச் செய்வது தென்னிலங்கை அரசியல் தலைவர்களின் கடமையே. ஆனால் அவர்களோ மேற்குறிப்பிட்டவற்றுக்குத் தாமே ஆப்பு வைத்துச் செயலாற்றுகிறார்கள்.

மனம் இருந்தால் இடமுண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதனைத் தந்திரமாக இழுத்தடிக்கும் இத்தலைவர்கள், புத்தாண்டுச் செய்தியில் சமாதானம் எழுதுவதால் அது வந்து விடுமா, என்ன?

# எழுதுநர், கணக்குப்பதியுநர், சிறாப்பர் நியமனம் பெறும் 69 பேரின் விவரம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

வடக்கு—கிழக்கு மாகாண சபையால் கடந்த ஆண்டு ஜூன் 27 ஆம் திகதி நடத்தப்பட்ட எழுதுநர், கணக்குப்பதியுநர், சிறாப்பர், களஞ்சியக் காப்பாளர் நியமனங்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகளின்படி யாழ். மாவட்டத்தில் சுமார் 300 முதல் 350 பேருக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நியமனத்தில்முதல் படியாக 69 பேருக்கு அடுத்த மாதம் 3 ஆம் திகதி முதல் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும்—

ஏனையோரின் நியமனங்கள் குறித்து விரைவில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் வடக்கு—கிழக்கு மாகாண பொது நிர்வாக பிரதிப் பிரதம செயலாளர் க. பரமலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார்.

முதல் கட்டமாக நியமனம் பெறும் 69 பேரின் பெயர் விவரம் வருமாறு:-

எஸ். சிவதர்சினி (கற்குழி, சாவகச்சேரி), ஜி. பிறேந்திரா (நல்லூர்), என். ஹேமலதா (சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை), என். சுதர்சினி (கொழும்பு — 04), ஏ. எம். தனஞ்சயன் (மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி), வி. ஜெயவிந்தன் (சின்னமலை, தொண்டமானாறு), கே. கோகுலன் (4 ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை), கே. பிரபாகரமூர்த்தி (வாதரவத்தை, புத்தூர்), எஸ். கோகுலசெல்வன் இடைக்காடு, அச்சுவேலி), எஸ். சந்திரராஜா (அல்லாரை தெற்கு, மீசாலை).

ரி. சிவனேசன் (தும்பளை, பருத்தித்துறை), ஆர். ஜெயராஜா (தொல்புரம், சுழிபுரம்), ஏ. லோகேஸ்வரன் (மானிப்பாய்), என். பத்மகரன் (வியாபாரி மூலை, பருத்தித்துறை) எஸ். சாரதாதேவி (முருகபவனம், மயிலிட்டி), எஸ். உதயகுமார் (சங்குவேலி வடக்கு, மானிப்பாய்), கே. புவனேந்திரம் (கரவெட்டி மத்தி, கரவெட்டி), எஸ். சிறீபாஸ்கரன் (பொலிகண்டி, வல்வெட்டித்துறை), ஆர். தேவகி (புலோலி வடக்கு, புலோலி), ஆர். கோமளம் (3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்), கே. நடேசு (கரணவாய் வடக்கு, வல்வெட்டித்துறை).

எஸ். சந்திரதாசன் (கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்), ஏ. சோதிநாதன் (காரைநகர்), பி. தர்மகுமாரன் (நீர்வேலி வடக்கு, நீர்வேலி), எம். யோகராஜா (மலர்மகள் வீதி, அரியாலை), ரி. நவரூபன் [திருமகள் வீதி, அரியாலை], ரி. பிரதீபன் [பலாலி றோட், கந்தர்மடம்], ரி. ரவிகரன் [குமரகோட்டம், கோண்டாவில்], பி. ஜெயகுமார் [தையிட்டி, காங்கேசன் துறை), ரி. கமலாசினி [நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்].

எஸ். ஏ. நர்மதா [தும்பளை, பருத்தித்துறை], வி. ரஜனிகாந் [சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி], கே. சுதாகரன் [தும்பளை, பருத்தித்துறை], கே. மோகனராஜ்குமார் [அளவெட்டி மத்தி, அளவெட்டி], ரி. ஏ. நிஷ்திலவர்ணன் [கரவெட்டி மேற்கு, கரவெட்டி], ஆர். தேவராஜன் [கனகராஜன் வீதி, யாழ்ப்பாணம்], ஆர். ராகவன் [கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்]. ஏ. உமாசங்கர் [புலோலி மத்தி, புலோலி], வி. குகனேசன் [தொட்டிலடி, சங்கானை].

என். சோதிரூபன் (புலோலி வடக்கு புலோலி), என். ஏ. நிர்மலா (வட்டு. மேற்கு வட்டுக்கோட்டை), பி. சுரேஷ்குமார் (இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி), பி. ஜீவானந்தம் (வடலியடைப்பு, பண்டத்தரிப்பு), எஸ். சிவபாலன் (இராமநாதன்றோட், யாழ்ப்பாணம்), எஸ். கணேந்திரன் (கொட்டடி, மானிப்பாய்), எம். ஸ்ரீகேசவன் (நீர்வேலி மத்தி, நீர்வேலி), ஜே. சுதாகரன் (கரவெட்டி மேற்கு, கரவெட்டி), எஸ். சியாமளா (பழம் றோட், கந்தர்மடம்), என். சற்குணேஸ்வரன் (தாளையடி).

ஏ. ரி. சிவரூபன் (ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி), எம். ஜூலியட் (நாராந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை) சி. கவிதா (தெல்லிப்பளை), கே. எஸ் கலைவதனி (மீசாலை கிழக்கு, மீசாலை), ரி. ராஜசிறீதரன் (துன்னாலை வடக்கு, கரவெட்டி), எஸ். அன்பழகன் (கடற்கரை வீதி, பருத்தித்துறை), ரி. கிருபாகரன் (மீசாலை வடக்கு, மீசாலை), பி. சிறீமதி (இணுவில் தெற்கு, சுன்னாகம்), எஸ். மதிவதனா (நாவற்குழி) ரி. சுகந்தி (பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கு).

என். நித்தியா (புன்னாலைக்கட்டுவன் வடக்கு, சுன்னாகம்), என். குமணன் (பலாலி வடக்கு, வயாவிளான்), எஸ். தயாளினி (ஐயனார் கோயிலடி மல்லாகம), எஸ் கிரிஜந்தி (கரம்பைக்குறிச்சி கிழக்கு, வரணி), கே. கலைப்பிரியா (மாரியம்மன் வீதி, திருநெல்வேலி), சி. சுதாகரன் (அல்வாய்), கே. நிசாந்திலா (கோப்பாய்), ரி. வளர்மதி (தையிட்டி, காங்கேசன்துறை), ரி. சிவமலர் (நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்), ஆ. எழில்வேந்தன் (கரணவாய் மேற்கு, கரவெட்டி).

இவ்வாறு தற்போது நியமனம் பெறும் 69 பேரும் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நியமிக்கப்படுவர் என மற்றோர் தகவல் தெரிவித்தது.

மேற்படி நியமனங்கள் குறித்து நேற்றைய தினம் சஞ்சீவியிலும் செய்தி ஒன்று பிரசுரமாகியிருந்தது தெரிந்ததே. (ஐ-7)

## வடமராட்சிக்கு மின் கிடைப்பதில் தாமதம்

வடமராட்சி, ஏப்ரல் 18

வடமராட்சிப் பிரதேசத்துக்கு 24 மணிநேர மின்சாரம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படும் என்று இலங்கை மின்சார சபையின் யாழ். பிராந்திய அலுவலகம் தெரிவித்துள்ளது.

24 மணிநேர மின்சாரத்தை வழங்கும் 'கூல் ஏயர்' நிறுவனம் மின் மாற்றிகளுக்கு வேண்டிய உதிரிப்பாகங்களை எடுத்து வருவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் காரணமாக புத்தாண்டு காலத்தில் வடமராட்சிப் பகுதிக்கு மின்சாரத்தை வழங்க முடியாமல் போய்விட்டது. என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை மின்சார சபை வடமராட்சிப் பிரதேசத்துக்கான 24 மணிநேர மின் விநியோகத்துக்கான இணைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்துள்ளது.

(ஐ-173)

## குஞ்சு பொரிக்கும் கருவிகள் தென்மராட்சியில் நான்கு பேருக்கு

தென்மராட்சி, ஏப்ரல் 18

தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் ஐ. நா. அபிவிருத்திதிட்ட அமைப்பினால் வழங்கப்பட்ட குஞ்சுபொரிக்கும் கருவிகள் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள நான்கு பயனாளிகளுக்கு அண்மையில் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் இடம்பெற்ற வைபவத்தில் ஐ. நா. அபிவிருத்தித்திட்ட அமைப்பின் சிரேஷ்ட திட்ட அலுவலர் திருமதி ஞா. சிவபாதசுந்தரம் தலா 20ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த குஞ்சு பொரிக்கும் கருவிகளை வழங்கினார்.

மிருசுவில் உசனைச்சேர்ந்த ஏ. ஏ. ரஞ்சிதநாதன் மந்துவில் கிழக்கைச் சேர்ந்த காசிநாதர் விஜயராஜசிங்கம், நுணாவில் மத்தியைச்சேர்ந்த திருமதி கந்தவனம், சாவகச்சேரி ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த முத்துவேலு உதயகுமார் ஆகியோருக்கே இந்த கருவிகள் வழங்கப்பட்டன என்று அந்தப் பிரதிநிதி தெரிவித்தார்

(இ-117)

# விசுவாசம்என்னும்கருவியைக்கொண்டு கடவுளைக்காணும்வாய்ப்புபெறுவோம்

"இப்போது சொற்ப காலம் நீங்கள் பல வகைச் சோதனைகளால் துன்புற்றாலும் அப்பேற்றை நினைத்து களி கூருகிறீர்கள். இச் சோதனைகள் நிகழ்வது உங்கள் விசுவாசம் உண்மையானது என்று காட்டவே"

[ 1 இராயப்பர் 1:6 ]

ஒவ்வொரு மனிதனும் தனது மனதினால் உந்தப்பட்டு தனது உள்ளத்திற்கு நிறைவு தரும் தெய்வத்திடம் அர்ப்பணித்து வாழ்கின்றான்.

எமது கண்களால் காண முடியாத கடவுளை நம்பிக்கை என்ற பெரும் உன்னத நிலையில் தன்னை அர்ப்பணித்து கடவுளை என்றும், எதிலும், எப்பொழுதும் கண் குளிரப் பார்க்கின்றான் மனிதன். நம்பிக்கை என்பது நாம் ஒவ்வொருவரும் எப்பொழுதும் இறைவனது கரங்களிலே இருக்கின்றோம் என்று தெரிந்து கொள்ளுதல் ஆகும்.

அருட்திரு சாள்ஸ்கொலின்

உலகத்திலே சாதனைகள் மலிந்து நிமிடத்துக்கு நிமிடம் சாதனைகள் செய்து வருகின்றார்கள் சிலர். ஒவ்வொரு தனி மனிதனும் தணியாத தாகம், புதிய படைப்பு, புதிய செயற்பாடுகள் என்பனவற்றை செய்து மக்கள் மனங்களைக் கவர்ந்து கொள்ள வேண்டும் என்ற சிந்தனையுடன் செயற்படுகின்றனர்.

இவ்வாறு சாதனைகளின் பின்னால் அலைந்து திரியும் மக்கள் எதிலும் நிறைவு காண்பதில்லை, திருப்தி கொள்வதில்லை, அமைதியும் அடைவதில்லை.

சாதனைகள் யாவற்றையும் கடந்த இறைமகன் இயேசு சாவை வென்று சத்திய வீரனாய் உயிர் பெற்று இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர், அவருடைய இறைவார்த்தையை மனதில் ஏற்று வாழ்வதே இன்றைய சத்திய வாழ்வு.

ஞாயிறு நற்பிரசாதம்

இயேசுவில் கடவுளின் மீட்பை ஏற்பதே எமது விசுவாசத்தின் அத்திவாரமாகும். விசுவாசம் என்பது இயேசுவோடு எம்மை ஒன்றிப்பதும், அவரைப்பின்பற்றுவதும் எமது முழு வாழ்வையும் நிபந்தனையற்ற அர்ப்பணிப்பாக்குவதுமாகும்.

எமது வாழ்வு கஷ்டம், வறுமை, சோதனை, துன்பம், இழப்பு, அழிவு போன்றனவற்றால் கட்டப்பட்டதொன்றாகும்.

இவைகளை தாங்கிக்கொள்வது மனித சக்திக்கு அப்பாற்பட்டது, சோதனைகளில் சோர்வடையாது ஆண்டவனில் விசுவாசம் கொண்டு வாழ்வதே இறைவாழ்வாகும்.

நாம் ஒவ்வொருவரும் கடவுளின் கரத்தில் இருக்கின்றோம் என்பதை வாழ்ந்து காட்டுதலின் வழியாக விசுவாசமின்றி அலைந்து திரிவோர்க்கு ஆழமான கிறிஸ்தவ விசுவாசத்தால் கிறிஸ்துவின் உயிர்ப்பிற்கு சான்று பகர்வோம்.

குடும்ப சூழலில், சமுதாய வட்டத்தில், அன்பியல் பகிர்தலில், கஷ்டப்படுவோரில் சிறிய விசுவாச செயல்களென வாழ்ந்து இன்றும் எம் மத்தியில் கிறிஸ்து வாழ்கின்றார் என்பதற்கு சாட்சிகளாவோம்; கடவுளைக் காணும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வோம்.

★

### நாளை

சித்திரை 6

திங்கட்கிழமை

திதி: சதுர்த்தி

பின்இரவு 1.01 வரை

நட்சத்திரம்: ரோகிணி நள்ளிரவு 12 41 வரை

சதுர்த்தி விரதம்

சுபநேரம்: 12 02-1 32

ராகுகாலம்: 7.32 9.02

(பகலுக்கும் இரவுக்கும் பஞ்சாங்க நேரப்படி)

### உதயவாக்கு

சிரமமான சூழ்நிலையை சிரித்துக்கொண்டே சந்திப்பவன் உன்னதமான மனிதன் என்று கருதப்படுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்ட உள்ளூராட்சிசபைகளும் இப்போது கசிந்து வரும் உண்மைகளும்

அம்பாறை மாவட்டத்திலுள்ள பதினைந்து உள்ளூராட்சிச் சபைகளினதும் (ஒரு நகரசபை, 14 பிரதேச சபைகள்), பதவிக்காலம் முடிவடைந்து, கலைக்கப்பட்டு விசேட ஆணையாளர்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

பதவிக்காலம் இன்னும் ஒரு வருடம் நீடிக்கப்படுமென்ற நப்பாசையுடன் இறுதிவரையும் மனப்பால் குடித்துக் கொண்டிருந்த அரசியல்வாதிகள் இதனால் ஏமாற்றமும் மனக்குமுறலும் கொண்டு சபைகளைப்பிரிந்தும் பிரியாத நிலையில் விடைபெற்றுக்கொண்டனர்.

பதவிக் காலம் முடிவடைந்து சபைகள் கலைக்கப்பட்ட மறுநாள் காலை சில பிரதேசசபைப் பிரிவுகளில் மக்கள் பட்டாசு கொளுத்திக் குதூகலித்துக் கொண்டனர். காரணம் கேட்டபோது. ''பெருச்சாளிகளின் அதிகாரம் அஸ்தமித்துப் போனமைக்காகவே அவ்வாறு மகிழ்ந்தோம்'' என்று பதில் வந்தது.

இந்தச் சபைகளின் ஆயுட்காலம் முடிவடையும் இறுதிக் காலகட்டத்தில் அதாவது ஒரு சில நாள்களுக்குள் சில பிரதேசசபைப் பிரிவுகளில், பிரதேசசபைத் தவிசாளர்கள் உறுப்பினர்கள் மிகவும் சுறுசுறுப்புடன் காணப்பட்டனர்.

ஐந்து வருடகால சேவைக் காலத்தைவிடவும் அந்த ஒரு சில நாள்களின் வீதிகளுக்குக் கிறவல் போட்டது முதன் பல வேலைகள் — சேவைகள் — மும்முரமாக நடைபெற்றதை சில பிரதேச சபைப் பிரிவுகளில் அவதானிக்க முடிந்தது.

இந்தச் சேவைகளைக் கண்டு மக்கள் வியப்படைந்தனர்: ஆனாலும் ஆஹா, ஓஹோ என்று பாராட்ட அவர்கள் முனையவில்லை!

சுழியோடினார்கள் — உண்மை தெரிந்தது. ஆயுட்காலம் முடிந்து வெளியேறும் போது அந்த உள்ளூராட்சி சபைகளின் கஜானாவைக் காலி செய்துவிட்டுச் செல்ல வேண்டுமென்ற ''அரும் பெரும்'' சேவையாகத்தான் இறுதி நேர 'கடுகதி' வேலைகள் நடைபெற்றன என்பதனை திருவாளர் பொதுஜனம் மிக எளிதகப் புரிந்து கொண்டார்.

இறுதி நாளன்று பிரதேச சபைகள் தோறும் பிரிவுபசார வைபவங்கள் நடைபெற்றன; சபை உத்தியோகத்தர்கள் ஊழியர்களிடமிருந்து தவிசாளர்கள், சபை உறுப்பினர்கள் பிரியாவிடை பெற்றுக் கொண்டனர்.

### சபதம் எடுத்தனர்

இந்த பிரிவுபசார வைபவங்களில் சிலதவிசாளர்களும் உறுப்பினர்களும் தாம் இனி தேர்தல்களில் போட்டியிடப் போவதில்லை என பகிரங்கமாக அறிவித்துச் சபதம் எடுத்துக் கொண்டனர்.

சில பிரதேச சபை வைபவங்களில், ஆட்சியிலிருந்த கட்சியினரை நோக்கி நாமே அடுத்த ஆட்சி அமைப்போமென எதிரணியினர் சூளுரைத்துக் கொண்டனர்,

இல்லை; மீண்டும் நாம் தான் ஆட்சி அமைப்போமென ஆட்சி அதிகாரத்திலிருந்தவர்களும் சோடைபோகாமல் வீறாப்பாகக் கூறிக் கொள்ளவும் தவறவில்லை.

எல்லாம் வாக்காளப் பெரு மக்களின் — பொது மக்களின் — இன்றைய மனநிலையை எடை போட்டுப் பார்க்காத ஏட்டுச் சுரைக்காய் வீறாப்பு வார்த்தைகளாகவே ஒலித்தன!

## தேர்தல் அறிவிப்பு வராமலே காற்று வீசுகிறது

அம்பாறை மாவட்டத்தின் தமிழ் பேசும் பிரதேசங்களில் முக்கியமான பிரதேசசபை கல்முனை பிரதேச சபை: சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின ஆட்சிப் பிடியிலிருந்த சபை அது.

அந்த சபையின் தவிசாளராக இருந்த எஸ். எச். ஏ. மஜீத் (மு.கா) சபையின் இறுதிக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றுகையில், தாம் இனி அரசியலிலிருந்து ஒதுங்கப்போவதாக அறிவித்தார். ''இனி என்னை எந்த நிறத்தைக் கொண்டும்பார்க்க வேண்டாம்'' எனவும் கேட்டுக் கொண்டார். தாம் பதவிக்கு வர உதவிய முஸ்லிம் காங்கிரஸை 'அம்போ' எனக் கைவிட்டார்.

சாக்கடை அரசியலின் தாற்பரியம் இதுதானா? என மக்கள் மூக்கில் விரலை வைத்துக் கொள்கின்றனர் இப்போது!

### கஜானா காலி!

கல்முனைப் பிரதேச சபையின் விசேட ஆணையாளராகக் கல்முனை பிரதேச செயலாளர் ஏ. எவ். எம். பளீல் பொறுப்பேற்றுள்ளார். அந்த சபையின் கஜானா காலியாக்கப்பட்டிருந்த கைங்கரியம் பதவியேற்று இரண்டொரு நாள்களில் தெரிய வந்தது.

1994 ஆம் ஆண்டு இதே சபையை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் தாம் பாரம் கொடுக்கும் போது (விசேட ஆணையாளராகவிருந்து) சுமார் 12 லட்சம் ரூபாவுக்கு மேல் கையிருப்பிலிருந்ததாகவும், இப்பொழுது சபையைப் பாரமெடுக்கும்போது, சபையில் நிதிவளம் எதுவும் இருக்கவில்லை என்றும் ஊழியருக்குச் சம்பளம் வழங்கக் கூட நிதிஇல்லாத நிலையிருப்பதாக ஆதங்கப்பட்டுக்கொண்டார் விசேட ஆணையாளர் பளீல்.

அதுமட்டுமன்றி கல்முனை நவீன சந்தையில் புதிதாகக் கட்டப்பட்ட திறந்த வெளிச் சந்தைக் கடைகள் சபை கலைவதற்கு ஒருநாள் முன்பதாக சபைத் தவிசாளராகவிருந்த எஸ். எச். ஏ. மஜீதின் சொந்தவிருப்பில், சபைத் தீர்மானத்திற்கு முரணாக (ஒருதமிழருக்குக் கூட இல்லை) பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தமையும்விசேட ஆணையாளர் பளீலுக்குப் புகாராகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடமை, உண்மை, நேர்மை தவறாத நிர்வாக அதிகாரியெனப் பெயர் பெற்ற ஆணையாளர் பளீல் இக் கடைகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் யாவற்றையும் ரத்துச் செய்து பொருத்தமானவர்களுக்கு நியாயபூர்வமாகப் பகிர்ந்தளிக்கத் தற்சமயம் ஆவன செய்துள்ளார்.

### தேர்தல் காற்று

இத்தனைக்கும் மத்தியில் அம்பாறை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் தேர்தலுக்காகத் தயாராகிக் கொண்டிருக்கின்றன கட்சிகள்.

தேர்தல் நடக்குமா?, நடக்காதா? என்பதே தெரியாத நிலையிலும்கூட வேட்பாளர் தெரிவுகளும், கருத்தரங்குகளும், ஆதரவு திரட்டும் நடவடிக்கைகளும் ஆரம்பமாகி மாவட்டம் முழுவதும் தேர்தல் காற்று வீசத் தொடங்கியுள்ளது.

கட்சிகள் சில உள்ளூராட்சித் தேர்தலுக்காக உஷாரடைந்துள்ள அதேவேளை, சுயேச்சை அணிகளுக்கே இம்முறை மக்களின் ஆதரவு இருக்குமென்ற எண்ணத்தில் சுயேச்சை அணிகள் பலவும் புற்றீசல் போல் முளைக்க ஆரம்பித்துள்ளன. கட்சிகள் மீது சேறுபூசும் துண்டுப்பிரசுரங்களை வெளியிடுவதிலும் இந்த சுயேச்சை அணிகள் ஈடுபட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களைப் பொறுத்த வரை, கடந்த காலக் கசப்பான அனுபவங்கள் காரணமாக ஓரணியில் தேர்தல்களை எதிர்நோக்க வேண்டுமென்ற மனநிலை வளர்ந்துள்ளது.

எனினும் தாம் தனித்தே போட்டியிட்டு அம்பாறையை கைப்பற்றுவோம் என்ற பீடிகையுடன் தமிழ் கட்சி ஒன்று (கூட்டணி அல்ல) வரிந்து கட்டிக் கொண்டு நிற்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பாறை அஞ்சல்
— அகீல் —

மொத்தத்தில் அம்பாறை மாவட்டத்தில் தேர்தல் மும்முரம் ஆரம்பமாகியுள்ளது.

### ஆவணப்படுத்தல்

கல்முனைப் பிரதேசத்தைச் சேர்ந்த கலை, இலக்கிய வாதிகளின் நூல்கள் மற்றும் ஆவணங்களைப் பொதுஇடமொன்றில் கோவைப்படுத்தவும், கண்காட்சிக்கு வைக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்முனை கலை, இலக்கிய நண்பர்கள் அமைப்பு இந்த முயற்சியில் இறங்கியுள்ளது.

விவரங்களைத் திரட்டும் பணி பூர்த்தியானதும் கண்காட்சி ஒன்றும் நடத்தப்படவிருக்கின்றது.

கல்முனை கலை, இலக்கிய நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த எஸ். அரசரெட்ணம், பரதன் கந்தசாமி, உமா வரதராஜன் ஆகியோர் இந்த முயற்சியில் முன்னணியில் நின்று ஈடுபட்டு வருகின்றனர்.

★

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# அன்புள்ள மகனுக்கு...

அன்புடன் மகனுக்கு,

நீ 07-03-99 திகதியிட்டு உன் அண்ணாவுக்கு எழுதிய மடலை நான் வாசிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. உனக்கு நிதானமாக அமர்ந்து பதில் எழுத முடிந்ததையிட்டு ஒருபுறம் மகிழ்ந்தாலும் அண்ணவின் மடலுக்கு உனது அறிவுக்கெட்டிய வகையில் சிறுபிள்ளைத்தனமான பதிலை எழுதியிருப்பதில் மறுபுறம் என்மனம் வேதனையடைகிறது.

மடல் மோதல்

மகனே! புத்தி சொல்வதும், அறிவுரை வழங்குவதும் எல்லோராலும் முடிந்தகாரியமல்ல. அதற்கும் ஒரு தகுதி வேண்டும். அனுபவமுதிர்ச்சி வேண்டும். அந்தத்தகுதி உன் அண்ணனுக்கு நிறையவே இருக்கிறது ஆனால் நீயோ அவனுக்கு பெருந்தன்மை, பகுத்தறிவு, பண்பாடு, மனிதநேயம், மானிடம் காணும் பருவக்கோளாறு, புரிந்துணர்வு இவை பற்றிய பகுத்தறிவு இல்லையென்று குறிப்பிட்டு எழுதியிருந்தாய்! உன்னுடைய இந்த வரிகள் உன்அண்ணனை எந்த விதத்திலும் பாதிக்கப் போவதில்லை. பதிலாக உனக்கு அறிவு வளரவில்லை என்பதையே பிரதிபலித்து நிற்கிறது.

உலகம் அணுவேகத்தில் முன்னேறியிருப்பது மட்டுமே உன்கண்ணுக்குத் தெரிந்திருக்கிறது. இந்த முன்னேற்றத்தின் விளைவாக எய்ட்ஸ் எரிமலை உருவாகி நாடெங்கிலும் பரவியிருப்பதோ, அல்லது ஒரு பாலுறவு என்ற சமூக ஒழுக்கக்கேடு உருவாகியிருப்பதோ உன் அறிவுக்கு எட்டவில்லைப் போலும்; அல்லது இவற்றை நீ மனிதகுலத்தின் முன்னேற்றம் எனக் கருதிவிட்டாயோ தெரியவில்லை. அப்படி நீ கருதியிருந்தால் அது உன் அறியாமையேயன்றி வேறில்லை.

உன் அண்ணன் படித்த காலத்தில் 4 ஏ, 4 பீ என்று பெறுபேறுகள் வரவில்லை; அதை ஒப்புக்கொள்கின்றேன். ஆனால் முக்கியமாக நீ ஒன்றைத் தெரிந்துகொள்ளவேண்டும், அவன் படித்த காலத்தில் ''ரியூசன் கிளாஸ்'' என்பது மருந்துக்குக் கூடக் கிடையாது: முழுக்க முழுக்க பாடசாலையை நம்பிப் படித்தே பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் போனான்: அவனைப்போல இப்போது உன்னால் ''ரியூசனுக்கு'' போகாமல் பாடசாலையையே முற்றுமுழுதாக நம்பிப் படித்து 4ஏ அல்லது 4பீ எடுக்க முயன்றால் நீயொரு விவேகி என்று ஒப்புக்கொள்வதோடு பெருமிதமும் அடைவேன், மேலும் ஐந்தாம் வகுப்பில் இருந்தே, ''ரியூசனுக்கு'' செல்ல ஆரம்பித்த நீ ஒரு பொழுதும ''ரியூசன்'' என்பதே என்னவென்று அறியாத உனது சகோதரனை விமர்சிப்பதற்கு எந்த விதத்திலும் தகுதியற்றவன் என்றே கருதுகிறேன்.

சின்ன மேளத்தைப்பற்றி நீ எழுதியிருந்தாய், வாசிக்க எனக்கு சிரிப்பு வந்தது. உன் அண்ணன் என் வயிற்றில் இருக்கும்போதே சின்னமேளம் என்பதே இல்லாமற் போய்விட்டது. அப்படியிருக்க அவன் எப்படி கடலை எறிந்திருக்கமுடியும். உன்னுடைய இந்தப்பதிலை வாசித்தபோது அரசியல் வாதிகளைப் போல் எவ்வளவு பக்குவமாய் காதிலே பூச்சுற்றுகிறாய் என்பதைக் கண்டு வியந்து நின்றேன்.

வள்ளுவர், பாரதி காதலைப்பற்றிச் சொன்னதையாவது நீ படித்திருக்கிறாய்; மெத்தநல்லது. ஆனால் காதலிப்பதற்கு சில தகுதிகள் வேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது. அதாவது நிரந்தர வருமானம் பெறக்கூடிய ஏதாவது தொழில் இருக்கவேண்டும். கைபிடித்தவளையும் குழந்தைகளையும் கண்கலங்காமல் காப்பாற்றக்கூடிய தகுதியும் திறமையும் வேண்டும். வெறும் வயதுக்கோளாறினால் ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் காமமுற்று சீரழிவதாகவே உன்போன்றவர்களின் காதல் எங்கும் விரவிக் கிடக்கின்றது.

மகனே! காதல் புனிதமானது. அது வீதியில் நாறுகின்ற மலமல்ல; சிப்பிக்குள் முத்துப்போல் இரகசியமாக இருக்கவேண்டியது. வாழ்க்கை பசும்பால் எனில் காதல் சர்க்கரை. பாலை சர்க்கரையில்லாமல் குடிக்கலாம். ஆனால் சர்க்கரையை தனியே சாப்பிட்டால்திகட்டிவிடும். இதை நீ எப்போது உணருகிறாயோ அன்றுதான் எனக்கு நிம்மதியும், மகிழ்ச்சியும் கிடைக்கும்.

இம்மடலை வரைந்தவர்
பா. கார்த்திகா

இறுதியாக உனக்கு ஒன்று கூறி விடைபெறுகின்றேன். எங்கே புண் இருக்கிறதோ அங்கேதான் மருந்து என்பது அத்தியாவசியமாகிறது: அதே போல அண்ணியிலோ, பிள்ளைகளிலோ எந்தக்குறைபாடும் இல்லை. அதனால் அவர்களுக்கு அண்ணன் கண்டிப்போ புத்திமதியோ தேவையில்லை. அது உன்போன்றவர்களுக்கே மிகவும் அவசியமாகின்றது. அத்தோடு வாசனைத்திரவியம் பூசிக்கொள்வதற்கும், சங்கிலி அணிந்து கொள்வதற்கும் நீ என்ன சமாதானம் சொன்னாலும் அது தேவையற்றதும் தவிர்க்கப்படவேண்டியதும் என்பது எனது கருத்து!

உன்னை நினைத்து வருந்தும்
அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிக்கான அம்புலன்ஸ் சேவை மீது அளவு மீறிய கட்டுப்பாடுகள்; கெடுபிடிகள்!

## வவுனியா வலம்

-ரா.இளவரசன்

## சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

ஈழப்போர் தீவிரமடைந்து பல வருடங்கள் ஓடிவிட்டன வவுனியாவிற்கும்—இராணுவக் கட்டுப்பாடில்லாத வன்னிப் பகுதிக்கும் இடையிலான வாகனப் போக்குவரத்துகளும் ஸ்தம்பிதமடைந்து பல வருடங்களாகிவிட்டன. இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியாவிற்கும் அதற்கு வடக்கே புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கும் வாகனங்களில் சென்று வருவதென்பது இப்போது அற்புதமான — அபூர்வமான— நிகழ்ச்சியாகிவிட்டது.

பல வருடங்களுக்கு முன்னர் பாப்பரசர் கொழும்பு வந்தபோது அவரைத் தரிசிக்கச் சென்ற மக்களை ஏற்றிக்கொண்டு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து சில பஸ்கள் வவுனியாவுக்கும் சென்று வந்தன. அடுத்து அடிக்கடி நடைபெறும் மடுத் தேவாலய உற்சவத்திற்குப் பக்தர்களை ஏற்றிக்கொண்டு வவுனியாப் பகுதியிலிருந்தும் வன்னிக்கும் பஸ்கள் சென்று வரும்.

இவையெல்லாம் எப்போதாவது ஒரு நாள் நடக்கும் சம்பவங்களாகிவிட்டன. இது தவிர 'கெயர்' ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகிய அமைப்புகளுக்குச் சொந்தமான வாகனங்கள் அடிக்கடி வெள்ளைத் தோல்களை ஏற்றிக்கொண்டு சென்று வரும். வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டிகளுக்கும் அனுமதியுண்டு. இது தவிர வேறெந்த தனியாரினதோ அல்லது திணைக்களங்களினதோ வாகனங்கள் எதுவும் வன்னியில் புலிகளின் பகுதிகளுக்குச் செல்லவும் முடியாது. அங்கிருந்து வரவும் முடியாது. உணவு கொண்டு செல்லுவதுகூட வவுனியாவிலிருந்து லொறிகளில் பொருள்களை எடுத்துச் சென்று உயிலங்குளத்தில் இறக்கிவிட்டு அவை திரும்பி வர — வன்னியிலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் வரும் லொறிகள் அந்தப் பொருள்களை வன்னிக்கு ஏற்றிச் செல்லும்.

இவ்வாறான கடுமையான கெடுபிடிகளுக்கு மத்தியிலும் ஓர் ஆறுதலாக— விதிவிலக்காக — இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வாகனங்களுக்கு அடிக்கடி பல்வேறு தேவைகளுக்காகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றுவர அனுமதி உண்டு.

நோயாளர்களைக்கொண்டு வருதல், கொண்டு செல்லல், வன்னிக்கான தபால்களை எடுத்துச் சென்றுவிட்டு, அங்கிருந்து கொண்டுவருதல் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடைபெறும் பரீட்சைகளின் வினாத்தாள்களை எடுத்துச் செல்லல், விடைத்தாள்களை எடுத்து வரல் மற்றும் இறந்தவர்களின் சடலங்களை எடுத்துச் செல்லல், எடுத்து வருதல், முக்கிய பிரமுகர்களை விசேட அனுமதியுடன் கூட்டிச் செல்லுதல், கூட்டிவருதல் என்று புலிகளின் பகுதிக்குச் செல்வதற்கான போக்குவரத்து வாகனத் தேவைகளின் அத்தியாவசியத்தைப் பெருமளவு பூர்த்தி செய்பவை இந்த இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்திற்குச் சொந்தமான அம்புலன்ஸ் வண்டிகளும், 'பிக் அப்' வாகனங்களுந் தான்.

சேவை நோக்கிலும், செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யவுமாக ஒரு குறிப்பிட்டளவு பணத்தைப் பெற்றுக்கொண்டு கெடுபிடிகளில் உள்ள—தளர்வுகளைப் பயன்படுத்திக் கொண்டு—மனிதாபிமான அடிப்படையில் நோயாளர்களை மட்டுமன்றி அவர்களது உதவியாளர்களாகச் சிலரை, வயோதிபர்கள், நடக்க முடியாதவர்கள், கர்ப்பிணிகள், கைக்குழந்தையுடன் வரும் பெற்றோர்கள் ஆகியோரையும் மற்றும் பிரத்தியேகமாகச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு கூடியளவு நிதியுதவி செய்த, செய்கின்றவர்களையும் வன்னியிலிருந்து கூட்டி வருதல், கூட்டிச் செல்லுதல் ஆகிய பணிகளும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சிக் கிளைகளினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆனால்இப்போது நிலைமை அப்படியல்ல; கெடுபிடிகள்

## சளைக்காமல் பணி புரியும் வவுனியா செஞ். சங்கம்

பயங்கரமாகி விட்டன. நோயாளி ஒருவர் பயணம் செய்வதே இப்போது மிகவும் சிக்கலானதாகி விட்டது.

அதாவதுமுன்னர் நோயாளி என்றால் சாதாரணமாகவே செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் பதிந்துவிட்டு அவரும் உதவியாளரும் பயணம் செய்யலாம். ஆனால் இப்போது அப்படியல்ல. செஞ்சிலுவைச் சங்க அம்புலன்ஸில் பயணம் செய்வதாயின் அரச வைத்தியசாலையின்—தலைமை வைத்தியர் நோயாளி பற்றிய விவரத்தைக் கொடுக்கவேண்டும். அதில் அவர் குறிப்பிட்ட நோயாளி நடக்க முடியாதவர் என்று எழுதினால்தான் அவர் அம்புலன்ஸில் செல்லலாம். இல்லாவிட்டால் அவர் உயிலங்குளம் ஊடாகக் கால் நடையாக வரவேண்டியதுதான்.

அத்துடன் அந்த நோயாளி தனிமையில் செல்ல முடியாது; அவருக்கு ஓர் உதவியாளர் தேவையென்று குறிப்பிட்டால் மட்டுமே உதவிக்கு ஒருவர் வரமுடியும். இல்லாவிட்டால் வரமுடியாது.

அம்புலன்ஸில் 5 நோயாளர்கள் வந்தால் அவர்களுக்கு 5 உதவியாளர்களும் வருவதுமுன்னர் நடைமுறை. தற்போது உதவியாளர் விடயத்திலும் கெடுபிடி அதிகரித்து விட்டது. அதாவது மொத்தமாக பயணம் செய்யும் நோயாளர்களுக்கு ஒரேயொரு உதவியாளர் மட்டுமே அனுமதிக்கப்படுவார். அது நடைமுறைச் சிக்கலானது. ஆண் நோயாளரைப் பெண் உதவியாளரும், பெண்நோயாளியை ஆண் உதவியாளரும் பராமரிக்க முடியாதென்று எடுத்துச் சொல்லப்பட்டதையடுத்து... இப்போது ஆண் நோயாளருக்கு ஓர் உதவியாளர், பெண் நோயாளருக்கு ஓர் உதவியாளர் என்ற அடிப்படையில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

ஆனால் ஒரு குறிப்பிட்ட நோயாளியின் உறவினரே உதவியாளராக அனுப்பப்படும் இந்தப் புதிய நடவடிக்கையால் — வரும் உதவியாளர் தனது உறவினரான நோயாளியை சிறப்பாகக் கவனிப்பதாகவும், ஏனையவர்களை 'அம்போ' என்று விட்டுவிடுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

அதேவேளையில் பொதுவாக எலா விதமான நோயாளருக்கும் ஓர் உதவியாளரை அனுப்பும் நடைமுறையினால் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுக்கும் தர்ம சங்கடமான நிலைமை ஏற்படுகிறது. அதாவது எல்லா நோயாளியும் ஒவ்வொருவரை உதவியாளராகக் கூட்டி வந்து என்னை அனுப்பு, உன்னை அனுப்பு என்று பிய்த்துப் பிடுங்குவதும் அவர்களுக்கு மத்தியில் தெரிந்தெடுத்து அனுப்பினால்... ஏனையவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினரைத் திட்டுவதும் வழமையான நிகழ்வுகளாகி விட்டன.

இவையெல்லாம் வன்னியிலிருந்து வருபவர்களுக்குத் தானென்றால் — வவுனியாவிலிருந்து போகும் நோயாளர்களின் நிலை இன்னும் மோசமானது. அதாவது போகும் நோயாளர்கள் மூன்று நாள்களின் முன்னேயே ஒரு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து வவுனியா செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக — வவுனியாவில் ரம்யா ஹவுஸ் என்ற இடத்தில் இயங்கிவரும் இராணுவ முகாமில் விண்ணப்பத்தையும் — நோயாளர் பற்றிய ஆவணங்களையும் ஒப்படைக்க வேண்டும். அவர்கள் இந்த விண்ணப்பத்தைப் பரிசீலித்து அனுமதித்தால் மட்டுமே அந்த நோயாளி பயணம் செய்யமுடியும். இல்லாவிட்டால் பொடி நடைதான்.

இதுதவிர தற்போது புதிய நடைமுறை ஒன்றும் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி வன்னியிலிருந்து வரும் நோயாளர் ஒருவர் எந்த இலக்க செஞ்சிலுவைச் சங்க வாகனத்திலே வருகிறாரோ — அதே இலக்க வாகனத்திலேதான் திரும்பி வன்னிக்குச் செல்ல வேண்டும். இந்தப் புதிய நடைமுறையும் நோயாளர்களை சிக்கலுக்குள்ளாக்கியுள்ளது. ஏனென்றால் நோயாளி வந்த வாகனம் அவரை விட்டுவிட்டு மீண்டும் வன்னிக்குச் சென்றுவிடும். அது திரும்பிவர எவ்வளவு வாரமாகுமோ, மாதமாகுமோ அதுவரை அவர் காத்துக் கொண்டிருக்கவேண்டும்.

இதுமட்டுமல்லாது வன்னியின் பாதைகளில் வலம் வரும் இந்த வாகனங்கள் அடிக்கடி பழுதடைவதும் வழமை. அவ்வாறு பழுதடைந்தால் அதுதிருத்தப்பட்டுவரும் வரை நோயாளிகள் காத்திருக்கவேண்டிய நிலைமையே காணப்படுகிறது.

இவ்வளவுக்கு அளப்பரிய சேவையாற்றும் வட செஞ்சிலுவைச் சங்கத்திற்குப் போதுமான வாகன வசதி வழங்கப்பட்டுள்ளதாவென்றால் அதுவுமில்லை. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்ஆகிய கிளைகளுக்குதலா ஒவ்வொரு அம்புலன்ஸ்களும் வவுனியாக் கிளைக்கு 2 அம்புலன்ஸ்களும்கைவசமுள்ளன. ஆயினும் இதைஎழுதும்போது வவுனியாகிளையின் ஓர் அம்புலன்ஸ் விபத்துக்குள்ளாகி பழுதடைந்து போயுள்ளது.

யுத்த முனையிலிருந்து சேவையாற்றும் இந்தச் செஞ்சிலுவைச்சங்கக் கிளைகளுக்கு வாகனத் தட்டுப்பாடு இருக்கும்போது தெற்கிலே உள்ள செஞ்சிலுவைச் சங்க தலைமைக் காரியாலயத்திலும், ஏனைய கிளைகளிலும் அம்புலன்ஸ்கள் சில போக்கிடமில்லாமலிருக்க, இன்றும் சில தலைவர், செயலாளர் வீடுகளுக்கு கறி, புளி வாங்கவும், பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் கூட்டிச் செல்லவும் பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுவது வேதனைக்குரியதாகவே உள்ளது.

இது தவிர வன்னிக்கான தபால் சேவையை செஞ்சிலுவைச் சங்க பிக் - அப் வாகனமொன்றின் மூலமே மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. குறிப்பிட்ட வாகனம் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் வவுனியாவிலிருந்து தபால்களை வன்னிக்கு எடுத்துச் செல்லும்; செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாள்களில் அங்கிருந்து கடிதங்களை எடுத்து வரும். ஆனால் இதற்காக தபால்

(8 ஆம் பக்கம் பார்க்க)


## எதிரொலி

- வலி-வடக்கிலே காணியைச் சுவீகரிக்கும் திட்டம் முற்று முழுதாகக் கைவிடப்பட்டு விட்டது எனச் சொல்ல முடியாத நிலை இருக்கும் போது காரை நகரிலும் காணி சுவீகரிப்புச் சம்பந்தமான பேச்சு அடிபடுகின்றது.
- ★ ஈழத் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசங்களைப் பாரம்பரியப் ''பிற''தேசங்களாக மாற்ற முயல்கின்றார்களோ?
- புலிகளின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்ட பின்னரே மடுவிலிருந்து அரச படைகள் வாபஸ் பெறப்படும் என அமைச்சர் பெர்னான்டோப்புள்ளே கூறுகிறார்!
- ★ அரச படையினர் வாபஸ் பெறப்படவே மாட்டார்கள் என்பதை வெளிப்படையாகச் சொல்வதற்குக் கத்தோலிக்கரான அமைச்சர் தயங்குகிறார் போலும்!
- தமிழ் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாகத் தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியைச் சந்திக்கப் போகின்றனவாம்.
- ★ சந்திப்பு, கோரிக்கை, பத்திரிகை அறிக்கை என அவர்களின் சாதனைப் பட்டியல்நீண்டு கொண்டே போக தமிழ் மக்களின் வேதனைப் பட்டியலும் நீண்டு கொண்டே போகின்றது!
- புத்தாண்டையொட்டி வலி - வடக்கிலுள்ள கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்வதற்குப் படையினர் அனுமதித்தனர்.
- ★ சாமியை வணங்குவதற்கும் 'ஆமி'யின் அனுமதி அவசியம் என்றாகிவிட்டது.
- கொழும்பு வாழ் தமிழ் மக்கள் இனத்தைப் பற்றிச் சிந்திக்காமல், வியாபார நோக்கிற் செயற்பட்டுள்ளார்கள் என அமைச்சர் தொண்டமான் கூறுகிறார்!
- ★ இந்தக் குற்றச்சாட்டில் உண்மை இருக்கலாம்; ஆனால் அதைச் சுட்டிக்காட்டும் தகுதி இந்த அமைச்சருக்கு இருக்கிறதா என்பதுதான் கேள்வி!
- குருநகர், பாஷையூர் மீனவர்கள் தமது வள்ளங்களில் பாய் போடக் கூடாதெனப் படையினர் தடை விதித்துள்ளனர்!
- ★ பாயில் மறைந்திருந்து விட்டுத் தம்மீது யாராவது பாய்ந்து விடுவார்கள் எனப் படையினர் அஞ்சுகிறார்களோ!
- இந்தியாவின் பிரதம மந்திரியாக வரும் எண்ணம் தன்னிடம் இல்லை என்கிறார் ஜெயலலிதா!
- ★ ஆனால் அந்தப் பதவியின் கடைசிஎழுத்தை நீக்கிவிட்டவரைப் போன்றல்லவா அவர் செயற்படுகின்றார் என்கிறார் ஒரு குறும்புக்காரர்!
- தென் மாகாணத் தேர்தல் முடிந்த பின்னரே புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என ஆளுங்கட்சிப் பிரமுகர் ஒருவர் கூறுகின்றார்!
- ★ போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான காலக்கெடு, காலத்துக்குக் காலம் பின்போடப்பட்டு வந்ததைப் போல், இப்போது பேச்சுவார்த்தைக்கான காலமும் பின்போடப்படுகின்றது!
- ஜெயலலிதா புதுடில்லிக்குப் பயணமாகும் முன்னர் அவருடைய பொருள்களடங்கிய 28 பெட்டிகள் அங்கே அனுப்பப்பட்டனவாம்!
- ★ யார் யாருக்கு என்னென்ன கொடுக்கப்பட இருக்கின்றனவோ யார் கண்டார்கள்?

— இடியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்



## திரு. த. கனகரத்தினம்

அவர்கள்

[அதிபர் தரம் II யா / வல்வெட்டித்துறை
றோ. க, த. க. பாடசாலை]

ஆசிரியராகவும், அதிபராகவும் 40 வருடங்கள் கல்விப்பணியாற்றி 18 - 04 - 1999 இல் ஓய்வுபெறும் எமது அதிபரைப் பாராட்டிப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள், அபிவிருத்திச்சங்கம்.**

யா / வல்வை, றோ. க. த. க.
பாடசாலை.
வல்வெட்டித்துறை.

(64863)

---

# கண்ணீர் அஞ்சலி

திரு. ந. இந்திரகுமார்
(இலங்கை வங்கி, சுன்னாகம்.)

**அவர்களின் அன்புத் தாயார்**

திருமதி

## நடராசா செல்லம்மா

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஆதவன் குடும்பம்
பருத்தித்துறை.

(சி/7232)

---

# அந்தியேட்டி அழைப்பும்
## நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்
24
—
06
—
1923



அரன் அடியில்
19
—
03
—
1999

திருமதி

## நாகமுத்து இராசம்மா

எங்கள் குலவிளக்காய் விளங்கி தன்னலமற்ற சேவை செய்து, நிறைவான வாழ்வு கண்டு தனது 76 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்த அமரரான எனது தாயார் நாகு இராசம்மா அவர்களது தற்காலிக இல்லத்தில் இன்று 18. 04. 99 நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அந்தியேட்டி கிரியையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**மக்கள்.- பூபாலசிங்கம் பூலோகதிரவியம்.**
**மருமக்கள்:- செல்வநாயகி, கங்கா மௌலீசன்**
**பேரமக்கள்:- நிதர்சன், டட்ஷாயினி.**
**பெறாமக்கள், சகோதரர்கள், மைத்துனி.**

நிரந்தர விலாசம்
'அன்பு வாசம்'
அச்செழு.
(64923)

வதிவிட விலாசம்
இராசவீதி,
4 ஆ கட்டை,
நீர்வேலி.

---

# திருத்தம்

14-04-1999 ஆம் திகதி உதயன் 3 ஆம் பக்கத்தில் வெளிவந்த விளம்பரத்தில் சிறி வெங்கடா ஜெம் அன் ஜுவல்லறி என்பதற்குப் பதிலாக சிற்றி வெங்கடா ஜெம் அன் ஜுவல்லறி என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகின்றோம்.

# பிரசுராலய திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

கைதடி ஸ்ரீ சச்சிதானந்த பிரசுராலயத் திறப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினராக பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும் கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட விவசாயக் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் சி. வி. கே சிவஞானம், சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மு. செ. சரவணபவ ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ஐ·க-17)

# வன்னிக்கா. ..

(ஆறாம்பக்கத் தொடர்)

திணைக்களத்தினால் வழங்கப்படும் கட்டணமானது அடிமாட்டு விலையாகவே உள்ளதாக வவுனியா செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள விசனம் தெரிவிக்கிறார்கள். அதாவது தபால் ஏற்றிச் செல்லும் வாகனம் ஒரு முறை வன்னி சென்றுவர ஆயிரம் ரூபா கட்டணமாக வழங்கப்படுகிறது. இதில் சாரதி சம்பளம், அவனது ஓர் இரவு தங்குவதற்கான பயணப்படி, டீசல், வாகனத் தேய்வு இத்தியாதிகளுக்கு எப்படிச் செலவிட முடியும் என்கிறார்கள். ஆயினும் இதனைத் தட்டிக் கேட்டு கட்டணத்தை அதிகரிக்கச் சொன்னால் வன்னிக்குத் தபாலே கொண்டு போக வேண்டாம் எனச் சொல்லி விடுவார்கள். அதனால் வன்னி மக்கள், தான் பாதிக்சப்படுவார்கள். அதனால் ஏதோ பலத்த நிதிக் கஷ்டத்தின் மத்தியிலும் பல்லைக் கடித்துக்கொண்டு தபால் சேவையை நடத்தி வருகிறோம் என்கிறார்கள் அவர்கள்.

இவ்வளவு கெடுபிடிகளுக்கு மததியிலும் வவுனியா செஞ்சிலுவைச் சங்கம் மேலதிகமாக கைதுசெய்யப்பட்டவர்களைத் தேடிப்பிடித்துக் கொடுப்பது, இறந்தவர்களின் சடலங்களை வன்னிக்கு அனுப்புவது, படையினரால் கொல்லப்படும் புலி உறுப்பினரின் சடலங்களை எடுத்துச்சென்று புலிகளிடம் கையளிப்பது, நிவாரணப் பணிகள், தொழில் நுட்பப் பயிற்சி நெறிகள் என்று ஏனைய கிளைகள் செய்யாத பல்வேறு சேவைகளையும் செய்து வருகிறது.

இந்தளவு கெடுபிடிகளுக்கு மத்தியிலும், தங்கள் தலைமைக் கிளையுடன் வாதாடித் தமக்குச் சேரவேண்டியதைப் பெற்றுக்கொள்வதுடன், தமது சேவைகள் தடுக்கப் படும்போது படையினருடன் முரண்பட்டு, கெடுபிடிகளைத் தளர்த்தி மக்கள் சிரமங்களைக் குறைக்கும் விதமாகச் செயற்படுவதில் வவுனியா செஞ்சிலுவைச் சங்க செயலாளர் சிவநாதன் கிஷோரின் பங்கு அளப்பரியதாகவே இருக்கின்றது. தினமும் காலையில் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் தமது குறைகளைக் கூறி நிவாரணம் பெறக் காத்திருக்கும் மக்களின் எண்ணிக்கையே இதற்குச் சாட்சியாகும்.

---

# உடற்கல்வி மாணவர்கள் கவனத்திற்கு

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி மாணவர்கள் அனைவரையும் நாளை (19 - 4 - 99) திங்கட்கிழமை காலை 9 00 மணிக்கு உடற்கல்வி விரிவுரை மண்டபத்திற்கு தவறாது சமுகம் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தலைவர்
உடற்கல்வி மாணவர் மன்றம்
யாழ். பல்கலைக்கழகம்

(64931)

---

# நன்றி நவில்கின்றோம்

உடுவில் பா. கிரிதேவ் ஆகிய நான் எனது விசேட அடையாள அட்டை, பாடசாலை அடையாள அட்டை, பணம் ஆகியவற்றைத் தவறவிட்டுவிட்டேன். இவை யாவற்றையும் எனக்கு எடுத்துத் தந்த **'தேவன் வாச் வேக்ஸ்' உரிமையாளர் நாதன்** அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

பா. கிரிதேவ்,
உடுவில் மகளிர் கல்லூரி மேற்கு வீதி,
உடுவில்.

(64926)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

**திருமதி நாகலட்சுமி தங்கவேலு**

அவர்களின் பாசமிகு தந்தையார்

## கந்தையா சரவணமுத்து

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

யா/பத்தமேனி
இரத்தினேஸ்வரி. வித்தியாசாலை.
அச்சுவேலி.

(64932)

---

# மனமார்ந்த நன்றி

கொழும்பில் விபத்தில் சிக்கி கால் என்பு முறிவுற்ற நிலையில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த என்னை மிகவும் அக்கறையுடனும் அவதானத்துடனும் கவனித்து, வேண்டிய சிகிச்சைகள் செய்து, மீண்டும் வழமைபோல நடக்க வைத்துள்ள

**சத்திரசிகிச்சை நிபுணர்**
**வைத்திய கலாநிதி எம். சிவகுமார்**

அவர்களுக்கும்

வைத்தியசாலையில் எனக்கு அன்பு காட்டி, ஆதரவு தந்த பல்கலைக்கழக மாணவிகள்

**செல்விகள் நளாயினி சோமசுந்தரம், சிவரூபி ஏரம்பமூர்த்தி ஜீ பகீரதி, சி மலர்ச்செல்வி, ஜெ அமலா இ காயத்திரி, எஸ். ரமணி**

ஆகியோருக்கும் அக்காலத்தில் என்னை வந்து பார்த்துத் தென்பூட்டிய

**உறவினர் நண்பர்கள், அனைவருக்கும்**

எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

- கோகிலா மகேந்திரன்

(64811)

---

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு
27
—
11
—
1965



உதிர்வு
18
—
04
—
1998

அமரர்

## வல்லிபுரம் ஜெயராசன்

[அப்பன்]

நீங்கள் அணைந்தாலும் உங்கள்
நினைவலைகள் அணைவதில்லை;

— குடும்பத்தினர்

காளிகோயிலடி,
மல்லாகம்.

(64917)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு தினத்தன்று

# இலவச தொலைபேசி; பொதுமக்கள் ஏமாற்றம்

வலி வடக்கு ஏப்ரல் 18

புதுவருட தினத்தன்று இலவசமாக தொலைபேசி வசதிகளைப் பெறலாம் என நினைத்து தொலைத் தொடர்பு நிலையங்களுக்குச் சென்ற பொது மக்கள் பலரும் ஏமாற்றத்துடன் திரும்பியதைக் காண முடிந்தது.

புதுவருடத்தை முன்னிட்டு ரெலிக்கொம் நிறுவனத்தினால் கடந்த செவ்வாய்க் கிழமையும், மறுநாள் புதன் கிழமையும் பொதுமக்களுக்கு சலுகை அளிக்கும் வகையில் உள்ளூர் தொலைபேசி அழைப்புகளுக்கு எதுவித கட்டணமும் அறவிடப் படமாட்டாது என அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

ரெலிக்கொம் நிறுவனத்தின் இந்த அறிவுறுத்தலை அடுத்து கடந்த இரு தினங்களும் குடாநாட்டில் உள்ள தொலைத் தொடர்பு நிலையங்களுக்குச் சென்ற பொது மக்கள் பலரும் தமக்கு அங்கு அத்தகைய சலுகை எதுவும் வழங்கப்படாததை அடுத்து ஏமாற்றத்துடன் திரும்பியதைக் காண முடிந்தது.

சில தொலைத் தொடர்பு நிலையங்களில் வழமையாக அறவிடப்படும் தொகையிலும் குறைவாகவும் —

இன்னும் சில இடங்களில் அரைக் கட்டணத்திலும் தொடர்பு கொள்ளவே பொதுமக்கள் அனுமதிக்கப் பட்டனர்.

[ஐ-7-86]

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

புற்றளைச் சித்திவிநாயகர் ஆலய பூங்காவன விழாக் குழுவின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

(க)

## முறைசாரா பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவினால் மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கணனி, தமிழ், ஆங்கிலம் தட்டச்சு சுருக்கெழுத்து ஆங்கிலமொழி. பொது அறிவும் பொதுவிவேகமும் ஆகிய பாடநெறிகள் அங்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் பாடசாலை அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன.

[ஐ ரீ]

## தேவை

எமது வைத்திய சாலையில் பயிலுநர் தாதியராக (NURSE) பாமஸியில் வேலைபழகுவதற்கு ஆண்/பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

உங்கள் சுய விபரத்துடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் கடைசி திகதி 30-4-99

❀ யாழ். நகரில் 24 மணிநேர சேவையும், தங்கும் விடுதி வசதியும் கொண்டது

**யாழ். வைத்தியசாலை**

284, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(64896)

## தேவை

### த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளர்களும் விற்பனை பழக விரும்புபவர்களும் [ஆண்கள் மட்டும்] தேவை.

★ திங்கள், செவ்வாய் நேரில் வரவும்.

தொடர்பு:

**த.குமாரசாமிரெக்ஸ்ரைல்ஸ்**

352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[சி/7224]

## பொதுக் கூட்டம்

சித்த மருத்துவ மாணவ மன்றத்தின் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் [20-04-99] செவ்வாய்க் கிழமை 11-30 மணிக்கு துறை மண்டபத்தில் நடைபெறும். அனைத்துமாணவர்களையும்சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
சித்த மருத்துவ மாணவர் மன்றம்,
கைதடி

[64903]

குலனையூர்

## கலைவாணி சனசமூக நிலையத்தின் 51 ஆவது ஆண்டு விழாவும் புனர்பூர்த்தி விழாவும்

குலனையூர் கலைவாணி சனசமூக நிலையத்தின் 51 ஆவது ஆண்டு விழாவும் புனர்பூர்த்தி விழாவும் இன்று (18-4 99) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறும்.

**பிரதமவிருந்தினராக**

உயர்திரு. திருலோகநாதன் (லோகன்) அவர்களும்
(தலைவர், வலி. மேற்கு பிரதேசசபை, ஈ.பி. டி. பி.)

**சிறப்பு விருந்தினர்களாக**

உயர்திரு. வே. மகேந்திரன் அவர்களும்
(உப. தலைவர், வலி.மேற்கு பிரதேசசபை, ஈ பி. டி. பி.)

உயர்திரு. கா. சந்திரராசா அவர்களும்
(வலி. மேற்கு பிரதேசசபை செயலாளர், சங்கானை)

கலந்து சிறப்பிப்பார்கள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகிகள்

கலைவாணி ச. ச. நிலையம்,
குலனையூர், அராலி.

(64880)

## கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி.

**DAY CLASS**

**A/L 99**

வணிகப்
புள்ளிவிபரவியல்
② மாதிரியெடுப்பும்
புள்ளிவிபரவியல்
அனுமானமும்

ஆரம்பம்:
செவ்வாய் 8 மணி
(20 - 04 - 99)

ஆசிரியர்:
த. தவசேகர்

(சி/7219)

## வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்.

## பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக இறைச்சிக் கடைகள்

# மீள் கேள்வி அறிவித்தல்

## 1999

1) குத்தகைக் காலம்:- 01 - 05 - 1999 தொடக்கம் 31 - 12 - 1999 வரை
2) கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 23 - 04 - 1999 நண்பகல் 12-00 மணி
3) கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி:- 23 - 04 - 1999 பிற்பகல் 2 00 மணி
4) மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| குத்தகையின் தன்மை | கடை வாடகை | கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | நிர்ணயிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| ஆட்டிறைச்சிக் கடை இல. 1 | 250/- | 1000/- | 100/- | 5000/- |
| ஆட்டிறைச்சிக் கடை இல 2 | 250/- | 1000/- | 100/- | 5000/- |
| மாட்டிறைச்சிக் கடை இல. 1 | 250/- | 1000/- | 100/- | 25000/- |
| மாட்டிறைச்சிக் கடை இல. 2 | 250/- | 1000/- | 100/- | 25000/- |

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், ஜே. பி. யூ. எம்.
தலைவர்,
வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்.

வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய்.
15 - 04 - 1999

(சி/72[illegible])

நல்லூர் பிரதேச சபை

## நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் ஆதனவரி நிலுவைகள் அறவிடும் பொருட்டு நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் என்னால் கோரப்படுகின்றன.

**மேற்படி பதவிக்கான தகைமைகள்**

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
3. 8 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
4. சிறந்த ஆரோக்கியமும் நல் நடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
5. நல்லூர் பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
6. தரகு அடிப்படையில் சேகரிக்கும் பணத்தில் 20% வேதனமாக வழங்கப்படும்.
7. தெரிவுசெய்யப்படுவோர் பிணை வைப்புப்பணமாக ரூபா 2000 செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு ''தலைவர், நல்லூர் பிரதேச சபை'' திருநெல்வேலி என்ற முகவரிக்கு 10 - 5 - 99 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

க.மணிபல்லவராஜன் ஜே. பி. யு. எம்.
தலைவர்
நல்லூர் பிரதேச சபை.

(சி/7222)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்
திரு. நா. சிவஞானம் அவர்களின்
பாசமிகு மாமியார்

திருமதி
**சரஸ்வதி நாராயணன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்,
புத்தூர்.

[64882]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## திருமண சேவை

1970, மிருகசீரிடம் சைவப் பெண்ணுக்கு ஜேர்மனி அல்லது உத்தியோகம் உள்ள மணமகன் தேவை. கிரக பாவம் 40. 8இல் செவ்வாய். வே. புண்ணியமூர்த்தி எம். ஜி. ஆர். அகம், மீசாலை. [64887]

## மணமகன் தேவை

திருகோணமலையைச் சேர்ந்த றோமன்கத்தோலிக்க மதத்தவரான 5' 3'' உயரமும் 24 வயதும் கொண்ட மெலிந்த அழகான தோற்றமுள்ள மகளுக்கு மணமகன் தேவை. வெளிநாட்டில் வதிவோரும் விண்ணப்பிக்கலாம். இல. 873, மே/பா உதயன். (64878)

## கணிதம்

ஆண்டு 6 இலிருந்து O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் தவணைப் பரீட்சையில் குறைந்த புள்ளியைப் பெற்றவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 34 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distintion பெறுபேறடைய கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. [64783]

## தவறிவிட்டது

மரியனிகஜானி ஜெயராஜன் என்பவருடைய விசேட அடையாள அட்டை கடந்த 14-4-99 அன்று மாட்டீன் றோட்டிற்கும் சப்பல் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 65/23 மாட்டீன் றோட், மேற்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். [64895]

435, நாவலர்வீதி, ஆனைப்பந்தியைச் சேர்ந்த நடேசு அம்பிகைபாகன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 0902016340) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்கண்ட முகவரியில் தந்துதவும்படி தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம். [64920]

சிவநாதன் கைதடி வடக்கு கைதடியைச் சேர்ந்த எனது டயறியும், கல்விச்சான்றிதழும் மற்றும் முக்கிய ஆவணங்களும் சாவகச்சேரி கண்டிவீதியில் விக்னேஸ்வராகளஞ்சியத்துக்கும் அம்பிகா டிஸ்பென்சரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து விக்னேஸ்வரா களஞ்சியத்தில் ஒப்படைத்து உதவவும். (64877)

## விற்பனைக்கு

பாவித்த அலுமாரிகள், கதிரைகள், மேசைகள், கட்டில்கள், TV, செற், அன்ரனாபைப் முதலியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப. ஜெகநாதன், சம்பியன் ஒழுங்கை, கொக்குவில். (64889)

## தவறிவிட்டது

யோகேந்திரம் முத்துலட்சுமி என்பவருடைய விசேட அடையாள அட்டை 13-4-99 அன்று யாழ். நவீனசந்தைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஐயனார் கோயிலடி, அராலி கிழக்கு என்ற முகவரிக்கு தயவு செய்து அனுப்பி வைக்கவும். [64927]

நவரட்ணம் அனோசாந்த் என்பவருடைய விசேட அடையாள அட்டை கடந்த 13–04–99 அன்று கல்வியங்காட்டுக்கும் கைதடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ந. அனோசாந், தச்சன் தோப்பு, கைதடி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (64897)

சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த முத்தையா ஐங்கரச்செல்வன் என்பவருடைய விசேட அடையாள அட்டை மானிப்பாய் மருதடிக்கும் கட்டுடைக்கும் இடையில் 14–04–99 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ,சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (64890)

## A/L MATHS

இணைந்த கணிதம் 2001 புள்ளிவிவரவியல், நிகழ்தகவு 99, 2000 வகுப்புகள் ஆரம்பம்: 23-04-99 தொடர்பு: ஆசிரியர் N.A. சயனன் (B.Sc) 60/1, வளாக வீதி, திருநெல்வேலி. (64839)

## ஆங்கிலம்

O/L, G.A.Q, B.A. மற்றும் ஆங்கில அறிவு தேவைப்படுவோர்க்கு தனியாகவோ அல்லது குழுக்களாகவோ சனி, ஞாயிறு நாள்களில் வீட்டில் வந்து சொல்லிக் கொடுக்கப்படும். தொடர்பு: K. சோமசுந்தரம் சந்தை ஒழுங்கை, சுதுமலை மானிப்பாய். (64870)

---

# இலங்கை இந்துமதகுருமார் ஒன்றியம்

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் இலங்கை இந்துமத குருமாருக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் பற்றிய விவரங்கள்

மேற்படி சிவாச்சார்ய குருகுல பயிற்சி நெறி பெறுவதற்கு இலங்கை இந்துமத குருமார் ஒன்றியம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எமது அமைப்பின் ஊடாக விண்ணப்பித்திருந்த அனைத்து மாணவர்களும் 5 வருடங்கள் ஸ்ரீகாஞ்சி சங்கர வேதாகம பாடசாலையில் இணைவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

### மாணவர்களின் பெயர் விவரங்கள்

| | | |
|---|---|---|
| பிரம்மஸ்ரீ | பா. ஸ்ரீஸ்கந்தராஜசர்மா | நீராவியடி |
| பிரம்மஸ்ரீ | பா. ஸ்கந்தரூபசர்மா | நீராவியடி |
| பிரம்மஸ்ரீ | சி. பிரபாகரசர்மா | தாவடி |
| பிரம்மஸ்ரீ | சு. லகுதரசர்மா | மட்டுவில் |
| பிரம்மஸ்ரீ | இ. தயாபரசர்மா | நல்லூர் |
| பிரம்மஸ்ரீ | நி. சேக்கிழார் | அராலி |
| பிரம்மஸ்ரீ | நி. தேவராஜன் | அராலி |
| பிரம்மஸ்ரீ | கே. பிரணவநாதசர்மா | கொக்குவில் |
| பிரம்மஸ்ரீ | சௌ. சசிகுமாரசர்மா | நல்லூர் |
| பிரம்மஸ்ரீ | யோ. சுபாஸ்கரசர்மா | அத்தியடி |
| பிரம்மஸ்ரீ | சி. வாகீஸ்வரசர்மா | ஆனைக்கோட்டை |
| பிரம்மஸ்ரீ | இ. விக்கினேஸ்வரக் குருக்கள் | கொக்குவில் |
| பிரம்மஸ்ரீ | ஐ. அரிகரன் | உரும்பிராய் |
| பிரம்மஸ்ரீ | ப. சோமகலாதரசர்மர | ஊரெழு |
| பிரம்மஸ்ரீ | ம. பிரசன்னரூபசர்மா | வல்வெட்டித்துறை |
| பிரம்மஸ்ரீ | நா. கௌரிசங்கர் | துன்னாலை |
| பிரம்மஸ்ரீ | வை. அபிராமசர்மா | பருத்தித்துறை |
| பிரம்மஸ்ரீ | வே. சிவராமன் | நவிண்டில் |
| பிரம்மஸ்ரீ | பே. கோகுலசர்மா | துன்னாலை |
| பிரம்மஸ்ரீ | ந. பாலசுப்பிரமணியசர்மா | கொக்குவில் |
| பிரம்மஸ்ரீ | வ. திவாகரசர்மா | கல்வியங்காடு |
| பிரம்மஸ்ரீ | வ. நகுலேஸ்வரசர்மா | கல்வியங்காடு |

மேற்குறிப்பிட்ட மாணவர்கள் பின்வரும் ஆவணங்கள் அனைத்திலும் 4 பிரதிகளுடன் 15 நாள்களுக்குள் எமது தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
2. கல்விசார்ந்த அனைத்து நற்சான்றிதழ்கள்
3. கிராமசேவை அலுவலரின் சான்றிதழ்
4. பிரதேச செயலாளரின் சான்றிதழ்
5. சமாதான நீதிவானின் சான்றிதழ்
6. புகைப்படம் (கலர் பாஸ் போட் அளவு) 6 பிரதிகள்

நன்றி.

சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள்
தலைவர்

பிரம்மஸ்ரீ கா. சந்திரசேகரசர்மா
பொதுச் செயலாளர்

தலைமைக் காரியாலயம்:
இல. 74, பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(64847)

---

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி
## கந்தசாமி இராசரூபதி
(மணியம் மடம், செல்வச்சந்நிதி.)

அன்னை மடியில் 1937 – 04 – 02
ஆண்டவன் அடியில் 1998 – 04 – 29

பாடுபட்டுப் பெற்றெடுத்துப் பாசமெலாம் கொட்டியெமை
பீடுபெறவைத்த அன்பு அம்மாவே!
நீங்கள் கூடுவிட்டுப்போனாலும் உம் குழந்தைகள் நாம்
இங்கு தினமும் வாடுகின்றோம் அம்மா!

— குடும்பத்தினர்

மயூரன் இன்டஸ்ரீஸ்,
சாவகச்சேரி.

(சி/7226)

---

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
## சண்முகம் சோமசுந்தரம்
(சண்முகம் ஸ்ரோஸ் உரிமையாளரும், உதயன், வீரகேசரிபத்திரிகை முகவரும் கரணவாய் குஞ்சர்கடை)

மண்ணுறவு 1934 - 07 - 03
விண்ணுறவு 1999 - 02 - 22

அன்னாரது அந்தியேட்டிக் கிரியையும் சபிண்டீகரண கிருத்தியமும் இன்று ஞாயிற்றுக்கிழமை 1999 - 04 – 18 அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி சோமசுந்தரம்,
குடும்பத்தினர்.

நீலன்குழத்தாழ்,
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(64563)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானதி உணவகம்

226/2, இராமநாதன் வீதி
[பல்கலைக் கழகம் முன்பாக]
சகல விதமான
அசைவ உணவு வகைகளையும்
சுவையாகவும் சுத்தமாகவும் உரிய காலத்தில்
பெறமுடியும்

① புரியாணி ② கட்லெட் ③ றோல்ஸ்

இன்னும் பல
விருந்து வைபவங்களுக்கான ஓடர்கள்
உரிய முறையில் கவனிக்கப்படுவதுடன் விரும்பிய
இடத்திலேயே விநியோகிக்க முடியும்.

T. P. No. 2360 and 2071 [64947]

# நல்லூர் வணிகர் கழகம்
## முக்கிய அறிவித்தல்

நல்லூர் வணிகர் சழகத்திற்குட்பட்ட அனைத்து வர்த்தக உரிமையாளர்களும் தமது வர்த்தக ஸ்தாபனங்களில் பணி புரியும் தொழிலாளர்களின் நலன் கருதி ஞாயிற்றுக்கிழமைகளில் தத்தமது வர்த்தக ஸ்தாபனங்களைப் பூட்டி அவர்களுக்கு விடுமுறை வழங்கி வணிகர் கழகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:

நல்லூர் பிரதேசசபைக் குட்பட்ட முக்கிய இடங்களான திருநெல்வேலி, கொக்குவில், நல்லூர், கல்வியங்காடு, அரியாலை ஆகிய இடங்களை உள்ளடக்கிய பிரதேசங்களில் உள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் யாவும் நல்லூர் வணிகர் கழகத்திற்குட்பட்டதென வர்த்தக உரிமையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

[64930] செயலாளர்

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர்
சைவப்புலவர்
## நா. க. தங்கரத்தினம்

அவர்களின் திடீர் மறைவினை அறிந்து துயருறும் நாங்கள் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா / வட்டு திருநாவுக்கரசு வித்தியாலயம்,
வட்டுக்கோட்டை.

(64934)

# மரண அறிவித்தல்கள்

## விசயரத்தினம் இராசையா
(Retd. Asst Supdt of Surveys)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட விசயரத்தினம் இராசையா நேற்று முன்தினம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசயரத்தினம்—சொர்ணம் தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற கார்த்திகேசு—விசாலாட்சி தம்பதிகளின் மருமகனும் ஞானாம்பிகையின் அன்புக் கணவரும் சதானந்தி (கனடா), பவானி, சஜீவி (3 ஆம் வருடம், இராமநாதன் நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயணன் (கனடா) அவர்களின் பாசமிகு மாமனும் காலஞ்சென்ற சுரேந்திரன், பத்மநாதன் (ஓய்வு பெற்ற மேல் நீதிமன்றப் பதிவாளர்) ஆகியோரின் மைதுனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 17-04-1999 சனிக்கிழமை நவாலியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ ஞானாம்பிகை
(மனைவி)

தம்பையா பண்டிதர் வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(64915)

## பெரியநாச்சி சுப்பிரமணியம்
(மணியம்)

இல. 932/21, நாச்சிமார் கோயிலடியில் வசிப்பவரும் நியூ லக்கி சிகை அலங்கார நிலைய உரிமையாளருமான பெரியநாச்சி சுப்பிரமணியம் (மணியம்) 17-04-99 சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சு. ஜீவசுதன் (சுதன்)
(மகன்)

(64935)

# சமய நிகழ்ச்சிகள்

அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகி பத்துத் தினங்கள் தொடர்ந்து இடம்பெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி சங்காபிஷேகமும், மறுநாள் திருக்குளிர்த்தி அபிஷேகமும் இடம் பெறும்.

உற்சவ தினங்களில் காலை 9.30 மணிக்கு விஷேட ஆராதனைகளும் நடைபெறும்.

(க)

★ ★ ★

கல்வியங்காடு ஸ்ரீ பத்திர காளி சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி தேவஸ்தான வருடாந்த உற்சவம் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (ஐ-7-ரி)

★ ★ ★

சாவகச்சேரி புராதன தான் தோன்றி அருள்மிகு அமிர்த பாஷிணி அம்பிகா சமேத வாரிவன நாத சுவாமி தேவஸ்தானத்தின் அலங்கார உற்சவப் பெருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது உற்சவம்தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

(ஐ-31)

★ ★ ★

வண்ணை. குளங்கரை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மகோற்சவ காலங்களில் தினமும் மாலை 6-30 மணி முதல் ஸ்ரீ காமாட்சி அம்பாள் சனசமூக நிலைய முன்றலில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனால் ''விநாயகர் புராணம்'' என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவும் நடத்தப்பட்டு வருகின்றது.

இதே வேளை மேற்படி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் சமய அறிவுப் போட்டி இம்மாதம் 25 ஆம் திகதி பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

(இ-7)

## PERSONAL CLASSES

பிரத்தியேக வகுப்பு
PHYSICS
**A/L 2000**

① ஒளியியல்
ஆரம்பம்:- 19-04-99
திங்கள் 4-00 p.m.

② ஒலியியல்
ஆரம்பம்:- 20-04-99
செவ்வாய் 4-00 p.m.


## PAPER CLASSES
**A/L 99**

ஆரம்பம்: 20-04-99
செவ்வாய் 5-00 p.m.
கடந்த கால வினாக்களும்
மாதிரி வினாக்களும்
கற்பிக்கப்படும்.

## A/L 2001
MECHANICS
பொறியியல்
(பிரிவு II)
ஆரம்பம்:- 28-04-99
புதன் 4-00 p.m.
ஆசிரியர்:
திரு. ம. ஸ்பெல்மன்
இடம்:
18, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(மாணவர் எண்ணிக்கை
(64944)

# வண்ணை
## ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்
# தேவஸ்தானம்

எமது தேவஸ்தானத்துக்குச் சொந்தமான — 145, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் அமைந்துள்ள — காணியில் கீழே காட்டப்பட்டபடி எட்டுக் கடைகள் அல்லது களஞ்சியங்கள் கட்டி வாடகைக்குக் கொடுக்கப்படவுள்ளது.




ஒவ்வொன்றும் 25 அடி நீளமும் 12 அடி அகலமும் கொண்ட இந்தக் கடைகள் தேவைப்படுவோர் முன்பதிவு செய்து கொள்ளலாம் மேலதிக விவரங்களுக்கு தேவஸ்தான செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

(சி/7239) ஆதீன மகா சபை

அளவெட்டி
# யுத் விளையாட்டுக் கழகத்தினால்

நடத்தப்படும்
11 பேர் கொண்டதும் 7 பேர் கொண்டதுமான
## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

இன்று (18/04/99) ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3.00 மணிக்கு
அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

11 பேர் கொண்ட போட்டியில் பங்கு பற்றும் அணிகள்
கிறாஸ்கொப்பர் எதிர் ஞானகலா
7 பேர் கொண்ட போட்டியில் பங்கு பற்றும் அணிகள்
ஞானமுருகன் எதிர் விண்மீன்
பிரவேசம் - 5/-

(64942) அளவெட்டி யுத் வி. கழகம்

ROTARACT CLUB
# அறிவித்தல்

யாழ். நகர் மைய றோட்டரக்ற் கழகத்தினால் (Jaffna Mid Town Rotaract Club) 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடை பெற இருந்த பட்டி மன்ற சுற்றுப் போட்டி **3-5-99** ஆம் திகதி நடைபெறும் என்பதை அறிவித்துக் கொள்கின்றோம்.

செயற்திட்ட இயக்குனர்.

[சி/7238]

வலி. மேற்கு பிரதேச சபை உப அலுவலகம்
சங்கானை
## ஞான வைரவர் சிறுவர் பாடசாலை
வருடாந்த
# விளையாட்டுப் போட்டி
1999

காலம்: 18-04-99 ஞாயிறு பிற்பகல் 2.00 மணி
இடம்: சங்கானை மாலியவத்தை மைதானம்

கௌரவ விருந்தினர்கள்:
திரு. ந. திரிலோகநாதன்
(தலைவர் வலி மேற்கு பிரதேச சபை)
திரு. வே. மகேந்திரன்
(உபதலைவர், வலி. மேற்கு பிரதேச சபை)

ஞானவைரவர் சிறுவர் பாடசாலை - நிர்வாகத்தினர்
சங்கானை.
(64945)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழாய்நீரைப் பயன்படுத்த வேண்டாம் எனப் பொதுமக்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18
ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்ட யாழ். பிரதான வீதி தண்ணீர்த் தாங்கியிலிருந்து பரீட்சார்த்தமாகத் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பிரதான தண்ணீர்த்தாங்கியிலிருந்து செல்லும் விநியோகக் குழாய்கள் கறள் பிடித்திருப்பதால் குழாய் மூலம் கிடைக்கும் தண்ணீரை பயன்படுத்த வேண்டாம் என்று பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர். (இ 5-7)

# சாகித்திய மண்டல பரிசு பெறும் நூல்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18
1997 ஆம் ஆண்டு வடக்கு—கிழக்கு மாகாணத்தில் வெளியிடப்பட்ட தமிழ் இலக்கிய நூல்களில் சாகித்திய மண்டலப் பரிசு பெறும் நூல்கள் பற்றிய விவரங்களை வடக்கு—கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது.

பரிசு பெறும் நூல்களினதும், நூல் ஆசிரியர்களினதும் விவரம் வருமாறு:-

★ நாவல்:- 'தர்மங்களாகும் தவறுகள்'—அ. ஸ. அப்துஸ்ஸமது

★ சிறுகதை:- 'வாழ்வுஒரு வலைப்பந்தாட்டம்'—கோகிலா மகேந்திரன்

★ சிறுவர் இலக்கியம்:- 'பாட்டுப் பாடுவோம் — த. துரைசிங்கம்

★ கவிதை:- 'நெஞ்சின் நெருடல்கள் — அமரர் எஸ். பற்குணம்.

★ சமயம்:- 'சௌந்தர்ய லஹரி'—ந. வீரமணிஐயர்.

★ ஆய்வு:- 'இலங்கையில் தமிழ் இயல் ஆய்வு முயற்சிகள்'—கலாநிதி க. அருணாசலம்.

★ நாடகம்:- மங்கையராகப் பிறப்பதற்கே'—வெ. தவராசா.

இதேவேளை பல்துறை இலக்கியம் என்ற வகையில் மேலும் 5 பேருக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளன. அவர்கள் விவரம் வருமாறு:-

★ எஸ். முத்துமீரான் (கிழக்கிலங்கை முஸ்லீம்களின் நாட்டார் பாடல்கள்)

★ அருணா செல்லத்துரை (இலங்கையில் தொலைச்காட்சி)

★ சபா. ஜெயராசா (பாலர் கல்வி)

★ பேராசிரியர் சோ. கிருஷ்ணராசா (தற்காலத்து யாழ்ப்பாண ஓவியம்)

★ பேராசிரியர் எஸ். தில்லைநாதன் (இலங்கைத் தமிழ் இலக்கியம்)

வடக்கு—கிழக்குமாகாணக் கல்வி அமைச்சினால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் திருகோணமலையில் நடத்தப்பட விருக்கும் தமிழ் இலக்கிய விழாவில் இவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும் என மாகாண பண்பாட்டலுவல்கள் உதவிப் பணிப்பாளர் எஸ். எதிர்மன்னசிங்கம் தெரிவித்தார்.

# ஓய்வூதியர் நலன்புரிச் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18
நல்லூர்த் தொகுதி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் 16 ஆவது ஆண்டுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

க. நடராஜா தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர்ப் பிரதேச செயலர் பி. செந்தில்நந்தனன் கலந்து கொள்வார். (இ-7)

கணிப்பீட்டு அறிக்கையும் பரிசு வழங்கலும்!

எமது நிறுவன மாணவர்களின் பெற்றோர்கள் தவறாது சமுகமளிக்க வேண்டும்.

சயன்ஸ் அக்கடமி
ஞாயிறு ( 18 - 04 - 99 )
மாலை 5 மணி

றூபா அக்கடமி
திங்கள் ( 19 - 04 - 99 )
மாலை 5 மணி

இயக்குநர்
[64919]

# நினைவு தின விழா

வடமராட்சி, ஏப்ரல் 18
மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் 92 ஆவது நினைவு தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத் தலைவர் சட்டத்தரணி ந. தங்கராசா தலைமையில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத் தலைவர் மா. நடராஜசுந்தரம் பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வீ. விஜயரட்ணம், வடமராட்சி கல்வி வலய உதவி ஆங்கில கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரமூர்த்தி, மேலைப் புலோலி கிராம சேவையாளர் கே. சண்முகநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

சிறப்புச் சொற்பொழிவுகள், பட்டிமன்றம், வில்லுப்பாட்டு மற்றும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இவ்விழாவில் மணிவிழாக் கண்ட வில்லிசைக் கலைஞர் சின்னமணி நா. கணபதிப்பிள்ளை கௌரவிக்கப்படுவார். (இ-15-173)

## ஈழத்தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்)

தங்கவைக்கப்பட்டிருந்த சமயம் தலைமறைவாகி விட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதுடில்லியிலிருந்து பாரிஸுக்குப் புறப்பட்ட இந்த விமானம் பாரிஸ் விமான நிலையத்தில் காணப்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக லண்டனுக்குத் திருப்பி விடப்பட்டது.

இந்த விமானத்தின் பயணிகள் லண்டனில் ஹோட்டல் ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே இந்த ஐவரும் மறைவாகி விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-21)

## பெருமாள்...

(முதலாம் பக்கத் தொடர்)

என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசியலில் ஈடுபடும் நோக்குடன் அவர் மீண்டும் கொழும்புக்கு வந்திருப்பதாக செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (இ-5-7)

# உயிலங்குளம் ஊடாக வவுனியா வர நேற்று 100 பேருக்கே அனுமதி!

## இன்று முதல் போக்குவரத்து முற்றாக தடை

வவுனியா, ஏப்ரல் 18
உயிலங்குளம் ஊடாக வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் செல்வதற்கு நேற்று நூறு பேருக்கு மட்டுமே படையினர் அனுமதி வழங்கினர்.

சொந்தக் கடமைகள் மற்றும் தேவைகளின் பொருட்டு வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்வதற்கு நேற்று ஆயிரம் பேர் வரை உயிலங்குளம் ஊடாக சென்றபோதும் நூறு பேரை மட்டும் உள்ளே செல்ல அனுமதித்த படையினர் ஏனையோரைத் திருப்பி விட்டனர்.

இதே வேளை உயிலங்குளம் ஊடான போக்குவரத்துக்கு இன்று முதல் தடை விதிக்கப்பட்டுள்ளதாக மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது.

மறு அறிவித்தல் வரை இத்தடை அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-5-7-21-164]

# பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18
கேகாலையில் நடைபெற்ற அகில இலங்கை பரியோவான் படையினருக்கான போட்டிகளில் அகில இலங்கை ரீதியாக முதல் 5 இடங்களைப் பெற்ற யாழ். மாவட்ட பரியோவான் படையினரைப் பாராட்டும் விழா நாளை திங்கட்கிழமை நடைபெறும்.

பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினரால் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இலங்கையர் கணேசன் தலைமையில் விழா நடைபெறும். (இ-ரீ)

# கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப். 18
யாழ். கல்வித்திணைக்களம் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றன.

### 17 வயதுப் பிரிவு

காலை 8-00 மணி

★ மகாஜனா எதிர் நாவற்குழி ம. வி. (யாழ். வலயக் கல்வி அலுவலக மைதானம்)

★ கைதடி முத்துக்குமார சுவாமி ம. வி. எதிர் ஹாட்லிக் கல்லூரி (கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி)

பிற்பகல் 3-00 மணி

★ ஆவரங்கால் மகாஜனா எதிர் இமையாணன் அ. த. க. பாடசாலை (யாழ். வலயக் கல்வி அலுவலக மைதானம்)

### 19 வயதுப் பிரிவு

காலை 8-00 மணி

★ மகாஜனா எதிர் நாவற்குழி ம. வி. (யாழ். வலயக் கல்வி அலுவலக மைதானம்)

★ யாழ். மத்திய கல்லூரி எதிர் ஹாட்லிக் கல்லூரி (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானம்)

பிற்பகல் 3-00 மணி

★ மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம. வி. எதிர் கரவெட்டி விக்னேஸ்வரா (யாழ். வலயக்கல்வி அலுவலக மைதானம்) (இ-7)

# விளையாட்டுப் போட்டி

புன்னாலைக்கட்டுவன் ஏப். 18
புன்னாலைக்கட்டுவன் பறக்கும் கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வருடாந்த வருடப் பிறப்பு விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி கழக மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு ச. முருகநேசன் முதன்மை விருந்தினராகவும், சி. குமாரவேல் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (க-133)

## புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்)

டால் உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு சம்பந்தப்பட்ட கட்சிகள் விரும்பவில்லை என்று கருதப்படும் என்றும்—பலாலியில் உள்ள யாழ். பாதுகாப்பு தலைமையகம் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

புளொட் அமைப்பினர் தற்பொழுது உளூராட்சி சபை உறுப்பினர்களாகவுள்ள பதவிப்பிரமாணம் செய்துள்ள 16 பேருக்கான 34 மெய்ப்பாதுகாவலர்களின் பெயர் விவரங்களை மட்டுமே வழங்கியுள்ளனர்.

யாழ். உளூராட்சி சபைகளில் புளொட் அமைப்புக்கு 62 உறுப்பினர்கள் இருந்தபோதும் இவர்களில் இராஜினாமாச் செய்த 46 உறுப்பினர்களின் இடத்தை நிரப்புவதற்கான பெயர்கள் தேர்தல் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது எனினும் அவை வர்த்தகமானி மூலம் அறிவிக்கப்படாமையால் தற்போது கடமையாற்றும் 16 உறுப்பினர்களுக்கான மெய்ப்பாதுகாவலர் பட்டியலே கொடுக்கப்பட்டுள்ளது என்று புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராசா தெரிவித்தார். (இ-5-6-7-173)

## பொலிஸாரின்...

(முதலாம் பக்கத் தொடர்)

னியாவில் வைத்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் மூன்று பொலிஸார் உயிரிழந்தனர் என்றும் இரு பொலிஸார் காயமடைந்துள்ளனர் என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைச் செயலகம் தெரிவித்துள்ளது. (இ-21)

# சமசமாஜக்கட்சியிலிருந்து வாசுதேவா இடைநிறுத்தம்

கொழும்பு ஏப்ரல் 18
வாசுதேவா நாணயக்கராவின் கட்சி அங்கத்துவத்தை நிறுத்தி வைப்பதென லங்கா சமசமாஜக் கட்சி முடிவு செய்துள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான பட்டிக்வீரக்கோன் தலைமையில் நேற்று நடைபெற்ற லங்கா சமசமாஜக் கட்சியின் கூட்டத்திலே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

எதிர்வரும் புதன்கிழமை முதல் நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி வரிசையில் சென்று அமருவதற்கு வாசுதேவ நாணயக்காரா முடிவு செய்துள்ளதை தொடர்ந்தே அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கையை கட்சி மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் வாசுதேவ நாணயக்காரா கட்சி அங்கத்துவத்திலிருந்து இடைநிறுத்தப்பட்டது குறித்து பொ. ஐ. முன்னணியின் செயலாளர் நாயகத்திற்கும் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நாணயக்காரா இராஜினாமா செய்ய வேண்டுமா? இல்லையா என்பது குறித்து கட்சியில் அரசியல் குழு விரைவில் கூடி முடிவு செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-5-7-க)

# இந்திய மீனவர் குறித்து விரைவில் முடிவு

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆறு இந்திய மீனவர்களை விடுவிப்பதா அல்லது தொடர்ந்து தடுத்து வைத்திருப்பதா என்பதுபற்றி சட்டமா அதிபர் திணைக்களம் விரைவில் முடிவு செய்யும்.

மேற்படி முகாமுக்கு அண்மையில் விஜயம்செய்த யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி செல்வி கௌரி சுந்தரலிங்கத்திடம் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்க்கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

பட இடதுசாரிக் கட்சிகள் இன்று புதுடில்லியில் கூடி தற்போதைய அரசியல் நிலைமை குறித்து ஆராய உள்ளன. (இ)

## நம்பிக்கை...

[முதலாம் பக்கத் தொடர்]

னைக் கருத்தில் கொண்டு செயற்படவில்லை என்று குற்றஞ்சாட்டினார்.

தேசிய அரசியலில் பிராந்தியக் கட்சிகள் பங்குபற்றலை எதிர்த்துவந்த காங்கிரஸ் கட்சி தற்பொழுது அந்தக் கட்சிகளுடன் இணைந்து மத்தியில் கூட்டரசு அமைக்க முயற்சிப்பதாகவும் வாஜ்பாய் தெரிவித்தார்.

அதேசமயம் காங்கிரஸ் ஆட்சி அமைத்தால் தமிழ் மாநில காங்கிரஸ் வெளியில் இருந்து ஆதரவு வழங்கும் என்றும் அ. தி. மு. க. கூட்டுச் சேரும் எந்த அரசாங்கத்துடனும் தமிழ் மாநில காங்கிரஸ் சேர்ந்துகொள்ளமாட்டாது என்றும் மூப்பனார் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் காங்கிரஸ் அடுத்து எடுக்க உள்ள நடவடிக்கை குறித்து முடிவு செய்ய காங்கிரஸ் செயற்குழு நேற்று இரவு புதுடில்லியில் கூடியது.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற முறையில் பிரதமராக வருவதற்கு சோனியா காந்திக்கு உரிமை உண்டு என்று காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றத் தலைவர் சரத் பவார் தெரிவித்தார்.

முன்னாள் கடற்படைத் தளபதி விஷ்ணுபகவத்தை மீண்டும் பதவியில் அமர்த்தும் கோரிக்கை உட்பட மூன்று கோரிக்கைகளை அ. தி. மு. க. தலைவி செல்வி ஜெயலலிதா அரசுக்கு விடுத்ததும் —

அவற்றை ஏற்றுக்கொள்ள அரசு மறுத்ததை அடுத்து அரசுக்கு அளித்து வந்த ஆதரவை ஜெயலலிதா விலக்கிக் கொண்டதும் தெரிந்தவையே. (இ-7-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-04-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org